சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.


Telephone : No. 300.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 24-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 36-ம் இலக்கம்

## சிறந்த செபம்— குடும்ப செபம்

(சங். பெயிற்றன்சுவாமிகள் ஆங்கிலத்தில்எழுதியதைத் தழுவியது)



குடும்ப செபத்தைப்பற்றிச் சொல்லப்புகுந்தால் உண்மையான குடும்பசீவியம் என்னவென்று முதன்முதல் அறிவிக்க வேண்டியதுஅவசியம். சொற்ப காலத்திற்குமுன் நடந்த ஓர்சம்பவம் என்கண்முன் நிற்கின்றது. தனவந்தன் ஒருவன் தனக்கு உகந்த துணைவியாகவும், குடும்பத்திற்குத் தலைவியாகவும் இருக்கும்வண்ணம் ஓர்காரிகையைக் கல்யாணம்செய்தான். அவனது துர்அதிர்ஷ்டம், சொற்பகாலத்துள் மனைவி அவனைத்தனியாக விட்டு அயல்நாடு ஏகினாள். அவளைத்திரும்பவும் அழைப்பான் வேண்டி அவள் பிரியப்படத் தக்கவிதமாக மாளிகைபோன்ற பெரியவீடொன்று அதிகபணம் செலவுசெய்து கட்டினான். வீட்டைஅலங்கரித்தற்கு அவசியமான சாமான்களைச் சேகரித்து வைத்தான். மனைவியைத் திரும்பி வரும்படி அழைத்தான். அவளும் வந்தாள். ஆனால்,சிலநாட்கள் தான் அங்கு தங்கினாள். பரிதாபம், திரும்பவும் வீட்டைவிட்டு அகன்றுவிட்டாள். அதற்குப்பின் அவள் எட்டிப்பார்க்கவேயில்லை, தனது கணவனையாகிலுஞ்சரி, அவனது வீட்டையாகிலுஞ்சரி.

இந்தப்பிரமாண்டமான கட்டடம் ஓர்குடும்பம்வதியும் இல்லமாகுமா? இல்லாளின்றி வீடு குடும்பஇல்லமாகுமா? தனவந்தன்கட்டியது ஓர்கட்டடம். அது குடும்பவீடென்றுசொல்ல யோக்கியதையற்றது. கட்டடம் மனிதனால்கட்டப்படுவது. ஆனால், குடும்பஇல்லம் கடவுளால் அமைக்கப்படுவது. வீட்டில் விலையுயர்ந்த மேசைகள், நாற்காலிகள், பட்டுத்திரைகள், இரத்தினக்கம்பளங்கள், மற்றும் விலையுயர்ந்த தட்டுமுட்டுகள் மட்டுமிருந்தால் உண்மைஇல்லமாகுமா? இல்லவேயில்லை. உண்மையான இல்லத்திலே அதில் குடியிருப்போர்மத்தியில் சாந்தம், பொறுமை, தயவு, ஒறுத்தல் முதலிய நற்குணங்கள் மிளிர வேண்டும். இவ்விதமேலான தளவாடங்கள் பணத்திற்குக் கிடையா. கடவுளே அவைகளை அளிக்கவேண்டும். எந்தஇல்லத்தில் குடும்பசெபம் நடக்கிறதோ அந்தஇல்லத்திற்கு இவ்வித ஞானக்கொடைகளை ஈசன்அருள்வார்.

எங்குபார்த்தாலும் மனிதர் வாழ வீடுகள் இல்லையென்று முறையீடு செய்யப்படுகிறது. மெய்யாகவே அது ஓர் பெருங்குறையே. இந்தக்குறையை நிறைவாக்குமுகமாக அரசாங்கம் பணம்தேடுகிறது, பிளான்போடுகிறது. சூரியவெளிச்சம் உட்பிரவேசிக்க, சுத்தஆகாயம் வந்துநிலவச் சன்னல்கள், கதவுகள், வேறுவழிகள் அமைக்கப்பட வேண்டுமென்று கோருகின்றார்கள். சிற்பிகள் இவைகளையெல்லாம்செய்து முடித்தாலும் குடும்பஇல்லம் அமைத்துவிட்டார்களென்று சொல்லமுடியுமா? குந்தியிருக்க ஓர்கட்டடம் போட்டுவிட்டார்கள். வாஸ்தவம். ஆனால்,நல்ல ஓர்குடும்ப இல்லம் அமைத்துவிட்டார்க

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# சீனாவில் நடப்பது என்ன?

## சீனக்கம்யூன்கள் அடிமைவேலை முகாம்கள்

வாங்என்பவருக்கு வயிற்றில் ஒருபுண் நெடுநாளாக இருந்து வந்தது. 1958-ம்ஆண்டுவைகாசி மாதம் வாங் ஒருடக்றரிடம் நிலையைவிளக்கிப் பரிகாரம்தேடினார். அந்தவயிற்றுப்புண்ணுக்கு அங்குவைத்தியஞ்செய்ய இயலாதென்றும், அதற்குத் தென்கிழக்குச் சீனஎல்லையை அடுத்துள்ள போர்த்துக்கேய பிரதேசத்திற்குத்தான் போகவேண்டுமென்றும்சொல்லி ஒருசீட்டு எழுதிக் கொடுத்துவிட்டார். மக்காவோவுக்குப் பயணம்போய் வைத்தியம் செய்துகொள்ள வாங்என்பவரிடம் பொருள்இல்லை.

டான் அறிவித்தல்கொடுத்த மூன்றும்நாள்காலை மறுபடியும் ஒலிபெருக்கிகள் அலறின. எல்லோரும் ஒன்றுதிரட்டப்பட்டார்கள். ஒவ்வொருவரின் பெயரும் வரிசையாக வாசிக்கப் படவேஅவர்கள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட கம்யூனிஸ்த அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். ஆண்கள்தனியாக, பெண்கள்தனியாக, 16வயதுக்குட்பட்ட இளைஞர்தனியாகப் பிரிக்கப்பட்டார்கள். இதற்கிடையில் கம்யூனிஸ்தசேவகிகள் பெண்களின் கையிலிருந்த குழந்தைகளையெல்லாம் பிடுங்கி ஒன்றாகச் சேர்த்துக் கொண்டிருந்தார்கள். இதுமுதல் இத்தாய்மார் தங்கள் குழந்தைகளைக் காணவேண்டுமானால் அவ்வூர்கம்யூனிஸ்த அதிகாரியிடம் அனுமதிச்சீட்டு வாங்கிக் கொண்டுதான் அரசாங்ககுழந்தைகள் இல்லத்தில் அவர்களைப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

வாங்என்பவருக்கு ஒருமரக்கட்டிலைக்காட்டி, இங்கே நீபடுத்துக்கொள்; உன்வயதைமுன்னிட்டு உன்னை ஒருகணக்கப்பிள்ளையாக நியமித்திருக்கிறோம் என்றான் அதிகாரி. தன் மனைவிமக்கள் தன்னோடுதங்க இடமில்லையே என்று வாங்கேட்டதற்கு அவர்கள்இனிமேல் உன்னுடன் தங்க மாட்டார்கள்; அவர்கள் இக்கம்யூனின் பெண்கள்பகுதியில் தங்கியிருப்பார்கள்என்று முறைத்தான்அதிகாரி. வாங்என்பவருக்கு தலையில் ஆயிரம்இடி விழுந்தது போலிருந்தது. அவருக்குமட்டுமல்ல அவரோடிருந்த அத்தனை பேர்தலையிலும் அதேஇடி விழுந்திருந்தது. இன்றுமுதல் வாங் தன்குடும்பத்தினரைக் கம்யூன் பொதுச்சாப்பாடு இடத்தில்தான் பார்த்துக்கொள்ளவேண்டும். வாங்கின்அதிகாரி அவர் தன்மனைவியை மாதம்நான்குதடவை அரைமணிநேரம் சந்திக்கலாம் என்று தெரிவித்தான். மாதம் நான்குதடவை என்றதுகூட ஒரு பெரியசலுகைதான். ஏனென்றால், மற்றவர்கள் மாதம்இருமுறைதான் தங்கள் துணைவியரைச் சந்திக்க உத்தரவுகொடுக்கப்பட்டிருந்தது.

காலை5மணிக்கு விசில்சத்தத்திற்கு எல்லோரும்எழவேண்டும். அதிலிருந்து 8மணிவரை ஆண் பெண் சிறுவர் அத்தனைபேரும் இராணுவ டிறில் பயிற்சி செய்ய வேண்டும். 8மணிக்குக் காலை ஆகாரம் பொதுவில்வழங்கப்படும். 8-30க்குப் பள்ளிப்பிள்ளை

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# உலகின் மூன்றாவது பெரிய நகரம்

(முன் தொடர்ச்சி)

ஜேர்மனியிலே ஹிற்லரின் சர்வாதிகாரம் தலைதூக்கிநின்ற காலத்தில் இரகசியமாக அவரைக்கொன்று அதிகாரத்தைக் கைப்பற்றக் கவுண்ட் ஸ்ராப்பென்பேர்க் பிரபு முயற்சி செய்தார். அவரதுதிட்டம் அதிகம்இரகசியமாகக் கையாளப்பட்டது. ஹிற்லர் இச்சதிகாரணமாக இறந்துவிட்டாரென்றே அவர் எண்ணினர். ஆனல், ஹிற்லர் தேவாதீனமாகத் தப்பிக்கொண்டார். அதனுல் அவரைக் கொல்ல ஸ்ராப்பெணபேர்க்பிரபுசெய்த சதி அம்பலமாயிற்று. உடனே ஹிற்லரின் அதிகாரவர்க்கம் பிரபுவைக்கைது செய்தது. பேர்ளின்நகரின் ஒருபக்கமாகவுள்ள உயர்தர இராணுவ தலைமைக் காரியாலயத்தில் நிறுத்தி அவரை 1944-ம்ஆண்டு ஆடிமாதம் 20-ந்திகதி சுட்டுக்கொன்றுவிட்டார்கள். அவ்விதம் சுட்டுக்கொல்லப்பட்ட அதேஇடத்தில் இப்பொழுது ஸ்ராப்பென்பேர்க்பிரபுவின் சிலையைநிறுவியிருக்கிறாகள். அதை நாம் நேரில் சென்று பார்த்தோம். ஸ்ராப்பென்பேர்க்பிரபுவின் திட்டப்படி ஹிற்லர் கொல்லப்பட்டிருந்தால் ஜேர்மனியின் விதி வேறுவிதமாக மாறியிருந்திருக்கும். ஆனல், உலகில் மிகப்பெரிய போரைநடத்திப் பெருமநாசத்தை உண்டாக்கப் பிறந்தவராதலால் அந்தச் சதியில் ஹிற்லர்இறக்காமல் தப்பித்துக் கொண்டார்போலும்.

ஒருநாள் மேற்குப்பேர்ளினிலுள்ள உருக்குக்கோபுரத்தின் உச்சிக்கு மின்சாரஏணிமூலம் ஏறிச்சென்றோம். அது "ஒலிபரப்பிக் கோபுர"மாகும் இந்தக்கோபுரத்தின் உச்சியில்இருந்து பேர்ளின்நகரின் பரந்த பொதுத்தோற்றத்தைக் கண்டுரசிக்கலாம். மிகப் பெரிய தெருக்களின் அமைப்பும், பசுமையானபல பொதுப் பூங்காவனங்களின் மேல்தோற்றமும் கண்களுக்கு அழகுவிருந்தளித்தன. அங்கு ஒவ்வொரு மூலையிலும் தூரதிருஷ்டிக் கண்ணுடிக் குழாய்கள் இருக்கின்றன. அவைகளின்மூலம் நகரின்தூரதோற்றத்தை அண்மையில் கண்டுரசிக்கலாம்.

அகண்டபேர்ளின் நகரம் 20 பிரிவுகளைக்கொண்டது. இவற்றிலே ஆறு பிரிவுகள் அமெரிக்கபகுதியிலும் நான்குபிரிவுகள் பிரித்தானியபகுதியிலும், இரண்டுபகுதிகள் பிரான்ஸிய பகுதியிலும் இருக்கின்றன. இவைகள் எல்லாம் சேர்ந்ததுதான் மேற்குப் பேர்ளின். இதன்விஸ்தீரணம் 85சதுரமைல். எட்டுப் பிரிவுகள் சோவியற் பகுதியில்அடங்கியிருக்கின்றன. இவ்வைகள் எல்லாம் சேர்ந்துதான் கிழக்குப் பேர்ளின். இதன் விஸ்தீரணம 154 சதுரமைல். 1948-ம் ஆண்டிலே கிழக்குப்பேர்ளினில் தனியாக ஒரு நகரசபையை அமைத்து நகரின்நிர்வாகத்தைக் கம்யூனிஸ்தர்கள் மேற்கொண்டார்கள். மேற்குப்பேர்ளினிலே ஜனநாயகமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் நகரின் நிர்வாகத்தை நடத்திவருகிறது. 1950-ம் ஆண்டு முதல் மேற்குப்பேர்ளினை ஒருநகரமாகவும், ஒரு தனி "இராச்சிய"மாகவும் அங்கீகரித்து ஆட்சிபுரிந்து வருகிறார்கள். கிழக்குப் பேர்ளினுக்கும், மேற்குப்பேர்ளினுக்கு மிடையே தெலிபோன், மின்சார இணைப்பு, எரிவாயு இணைப்பு, தண்ணீர்க்குழாய் இணைப்பு எல்லாம் துண்டிக்கப்பட்டுவிட்டன. ஆனல், நல்லகாலத்துக்குக் குறிப்பிட்ட ஒரு எல்லைவரை திரும், பஸ் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. நகரசபைத் திரும் வண்டிகளுநம, பஸ்களுநம் மேற்குப் பேர்ளினுக்கும், கிழக்குப்பேர்ளினுக்கு மிடையே நிர்ணயிக்கப்பட்டிருக்கும குறிப்பிட்டஎல்லையுடன் நின்றுவிடுகின்றன. அந்த எல்லையைத் தாண்டிப் போக முடியாது.

தரிசகர்களுக்குக் கிழக்குப் பேர்ளினைக் காட்டுவதற்கென்று மேற்குப் பேர்ளினிலிருந்து விசேஷ பஸ்கள் செல்லுகின்றன. அப்பஸ்களின்சாரதிகள் வழியிலுள்ள இடங்களைப்பற்றியும், கிழக்குப்பேர்ளின் நிலைமையைப்பற்றியும் மளமளவென்று ஆங்கிலத்தில் சுவையோடு விளக்கம் தருகிறார்கள். நாம் ஏறிச்சென்ற பஸ்ஸின் சாரதியும் ரசமாக விளக்கம் கூறிக்கொண்டே கிழக்குப்பேர்ளினுக்கு எம்மைஅழைத்துச்சென்றார். அவரதுவிளக்கம் அவருக்கு மனப்பாடம் என்பது தெளிவாயிற்று. எம்மைப்போல எவ்வளவோ தரிசகர்களுக்கு அதேமாதிரி அவர்கூறியிருந்திருப்பார் என்பதில் ஐயம்ஏற்படவில்லை. அவர் பேச்சிலே பிரசாரப் பண்பும் நிறைந்திருந்தது.

கிழக்குப் பேர்ளினை நோக்கிப் போகும்போது ஒருபெரிய நீண்டதெருவின் ஓரத்தில் எம்மை ஏற்றிச்சென்ற பஸ்நின்றது. அங்கு ஓரிடத்தில் மகாயுத்தத்தின்போது பேர்ளின் நகரில் போரிட்டு இறந்துபோன சோவியற் படைவீரர்களின் ஞாபகார்த்தமாக ஒருகட்டடத்தை எழுப்பியிருக்கிறார்கள். அதன்முகப்பு கம்பீரமாகவிளங்குகிறது. நாம பஸ்ஸிலிருந்து இறங்கி அங்குசென்று அதைப் பார்த்தோம். அதன பின்புறமாக ஓர்சிறு தோட்டமும் காணப்பட்டது. அங்கு ஒருவர் பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் வார்த்துக்கொண்டிருந்தார். அந்தஇடத்தில் குறிப்பிட்ட ஒருபகுதிக்குமேல் போக முடியாது. அதுவரைசென்று பார்த்துவிட்டுத் திரும்பவேண்டும். அங்கு சோவியற்வீரர்கள் ஆயுதபாணிகளாகக் காவல் செய்துகொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு நாம்பஸ்நின்ற இடத்திற்குத் திரும்பினேம்.

சிறிதுநேரத்திற்கெல்லாம் மேற்குப் பேர்ளின் எல்லையைத் தாண்டிக் கிழக்குப்பேர்ளின்நகருள் பிரவேசித்தோம். அங்கு கிழக்குப் பேர்ளின் பொலிசர் நின்றுகொண்டிருந்தனர். நீண்டசில தெருக்களின்வழியாகப் பஸ் சென்றது. அநேக இடங்களில் பிரமாண்டமான கட்டடங்கள் பாழடைந்தநிலையிலே எமது கண்களை உறுத்தின. மகாயுத்தத்தின்போது கிழக்குப்பேர்ளின் அதிகமாகச் சேதமடைந்திருக்கிறது என்பதை நேரில் கண்டோம். கிழக்குப்பேர்ளினில்தான் அரசாங்க கட்டடங்களும், மிகப்பெரியமாளிகைகளும், பல மந்திரிசபைக் காரியாலயங்களும் இருந்திருக்கின்றன. இவைகள் எல்லாம் குண்டுகளுக்கு இரையாகி, மூடமாகி, மூளியாகிநிற்கும்பரிதாபம் எமது உள்ளத்தை உலுக்கியது. பல வீதிகளில் நாம்பார்த்த பழையமாளிகைகளும், பிரமாண்டமான கட்டடங்களும் திருத்தப்படாமல் சேதமுற்ற நிலையிலேயே இருந்துவருகின்றன.

சர்வாதிகாரி ஹிற்லர் வாழ்ந்த அழகியகட்டடம் இன்று தரைமட்டமாய்க் கிடப்பதை நேரில்கண்டோம். அந்தக் கட்டடத்தின் அடியிலுள்ள அறையில்தான் ஹிற்றர் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படுகிறது. ஹிற்லரின் நாஸிஸத்தினுல் ஜேர்மனிக்கு நேர்ந்துள்ள சர்வநாசத்தை என்னவென்று சொல்வது? அந்தத் தனி மனிதனின் யுத்தவெறியினுல், ஆதிக்க மனப்பான்மையினுல் ஜேர்மனிக்கும், உலகத்திற்கும் ஏற்பட்ட அனர்த்தத்தை நாம் எப்படி மறக்கமுடியும்?

கிழக்குப்பேர்ளினில் சோவியற்செல்வாக்கு முத்திரை பெற்றுள்ளது. ஸ்ராலின் பெயரில் அங்கு வீதிஇருக்கிறது. நீண்ட அகலமான ஒருதெருவில் நடந்து சென்றோம். அங்கு இருபக்கங்களிலும் மிகப்பெரிய கட்டடங்கள் காணப்பட்டன. அவைகள் எல்லாம் ருஷியாவிலுள்ள ஜோர்ஜியாப் பகுதியின் முறையில் கட்டப்பட்டிருக்கின்றனஎன்று எமக்கு அறிவிக்கப்பட்டது. தெருஓரமாகவுள்ள கடைகள் மிகவும் பெரியனவென்று சொல்வதற்கில்லை. எல்லாம அரசாங்கத்தினுல் நிர்வகிக்கப்படுகிறவைகளே. காட்சிக்கு மிகவும் ஆடம்பரமாகப் பொருட்கள் வைக்கப்படவில்லை. தெருவோரத்தில் மக்கள் ஒருவருக்குப்பின் ஒருவராகக் "கியூ" வரிசையில் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் தக்காளிப்பழம் முதலிய காய்கறிகளை வாங்கவே அவ்விதம் நிற்கிறார்கள் என்பதை நேரில் கண்டோம்.

அங்கிருந்த ஒருஒட்டலில் தண்ணீர் வாங்கிக் குடித்தோம். ஆனல், வேறு எந்த உணவையும் வாங்கிச் சாப்பிட முடியாமல் போய்விட்டது. ஏனெனில், எமதுவசம்இருந்த மேற்குஜேர்மனியின் காகிதசெலவாணி கிழக்கு ஜேர்மனியிலோ, கிழக்குப் பேர்ளினிலோ செல்லுபடியாகாதென அறிந்தோம். இரு ஜேர்மனியிலும் தனிப்பட்ட காகிதச்செலவாணி நடைமுறையில் இருந்துவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இருவித காகித செலவாணிகள் இருந்தபோதிலும் அவைகளுக்கு "மார்க்"என்ற பொதுப்பெயரே இடப்பட்டிருக்கிறது.



## பல தேசங்களில்

● கேரளநாட்டின் சனத்தொகை கடந்தஏழுவருடங்களிலும் சுமார்17 லட்சம்போரல அதிகரித்துள்ளது. 1951-ம்ஆண்டின் குடிசனமதிப்பின்போது 1கோடியே 35லட்சத்து50 ஆயிரம்பேராய் இருந்தசனத்தொகை இப்போது 1கோடியே 52லட்சத்து 30ஆயிரம்பேராய் அதிகரித்திருக்கின்றது.

● ஜப்பானிலே அணுக்குண்டு வீசப்பட்ட முதலாவதுநகரமாகிய ஹிரோஷிமாவைத் தலைமைஸ்தானமாகக்கொண்டு ஓர்புதியமேற்றிராசனம் வகுக்கப்பட்டுள்ளது. இதன் முதல் மேற்றிராணியாராக ஓர்ஜப்பானியரான வண. ஜோண் ரொகிரூக் கோடா சுவாமியார் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். ஹிரோஷிமா மேற்றிராசனம் 12,000கத்தோலிக்கரையும், 45கோவில்களையும்கொண்டது. அதன் மொத்தக்குடிசனம் எழுபதுலட்சம் பேர்.

● சீனஒநாய்களுக்கு ஒருபாடம் படிப்பித்துக்கொடுக்கும் முயற்சியில் தாங்கள் சேவைசெய்யத் தயாராயிருப்பதாகத் தொழிற்சங்கசேவையாளர், மாணவர்கள்உட்பட இருபதுபேர் தங்களுடையஇரத்தத்தில் கைச்சாத்திட்ட ஓர்பத்திரத்தை இந்தியகாங்கிரஸ் தலைவி திருமதிஇந்திராகாந்தியிடம் சென்ற9-ந்திகதி கொடுத்திருக்கின்றனர். எல்லையிலே சீனஊடுருவலுக்குந்தலைதை எதிர்த்துக் கடுமையானநடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அப்பத்திரத்திலே வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

● அமெரிக்க திருச்சிலுவைச்சபைப் பிறதர்மாரால் அடியிடப்பெற்ற ரோமை நகரின் நோட்றேடாம் சர்வதேச கலாசாலைக்கு அன்று கருதினல் சிகொக்ஞனிஆண்டவர் அஸ்திபாரக்கல் நாட்டியபோது 26நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டமண் சுண்ணச்சாந்துடன் கலக்கப்படலாயிற்று. இந்தக்கலாசாலையிலே 35நாடுகளையும், 13சமயங்களையும்சேர்ந்த 270மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள்.

● திருச்சபையிலே ஒரேமுறையில் மிகப்பெருந்தொகையான கருதினல்மார்களை ஆக்கியபெருமை 10-ம்சிங்கராய பாப்பானவருக்கே உரியதாகும். அவர் 1517-ம்ஆண்டு ஆடிமாதம்1-ந்திகதியன்றுகூடிய கருதினல்மார் திருச்சங்கத்தில் ஒரேமுறையில் 31 கருதினல்மாரை ஆக்கினர். அவரைத் தொடர்ந்து அடுத்தபடியாகப் பெருந்தொகையாய்ப் 14-ம்ஆசீர்வாதப்பபாப்பானவர் 27கருதினல்மாரையும், 11-ம் பத்திநாதபாப்பானவர் 20கருதினல்மாரையும், 10-ம்பத்திநாதபாப்பானவர் 18கருதினல்மாரையும் ஒரேமுறையில் ஆக்கியிருக்கின்றார்கள். தற்போதைய 23-ம்அருளப்பபாப்பரசர் தாம்கூட்டிய முதலாவதுகருதினல்மார் திருச்சங்கத்தில் 23புதியகருதினல்மாரை ஆக்கியிருக்கின்றார்.

● ஜேர்மனிதேச ரிறியர்நகர் ஆசனக்கோவிலிலே தற்போது காட்சிக்கு வைக்கப் பட்டிருப்பதும், கல்வாரியிலே நமதுதிவ்வியகர்த்தால் அணியப்பட்டிருந்ததுமான தையலில்லாத திருஅங்கியை நிகழுப்புரட்டாசிமாதம் 20-ந்திகதிவரையிலே பத்துலட்சம்யாத்திரிகர்களுக்குமேல் தரிசித்திருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது.

● 45வயதுடைய ஓர்சுவிற்சர்லாந்த வழிகாட்டியான திரு. ஹெர்மன் ஜெய்க்கர்என்பவர் அல்ப்ஸ்மலையிலுள்ள பனிப்படலங்களிலும், மற்றும் கிட்டிச்சேரமுடியாத இடங்களிலும் போய் இறங்குவதற்கென்று புதிய சாதனம்ஒன்றைக் கண்டுபிடித்துக் கடந்தசிலவருடங்களிலே எத்தனையோபேரைத் சிவமோசத்தினின்று காப்பாற்றிவைத்ததைப் பாராட்டி அருளப்பபாப்பரசர் அவருக்கு அர்ச். பெரியகிறகோரியாரின் நைற்பட்டம் சங்மானித்திருக்கின்றார்.

● 12-ம்பத்திநாதபாப்பானவரின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் சினிமாப்படம்ஒன்றைத் தயாரிக்கும்முயற்சியை அருளப்பபாப்பரசர் ஆசீர்வதித்து ஊக்கப்படுத்திவிட்டிருக்கின்றார். இந்தச்சினிமாப்படம் கலிபோனியாவைச்சேர்ந்த ஓர்சுயாதீன தயாரிப்பாளரான திரு. டான் மெறின்என்பவரால் உற்பத்திசெய்யப்படவிருக்கிறது. இது கலரிலே படம்பிடிக்கப்படும்.

● ரிறியர்நகரிலே நமதுஇரட்சகரின் தையலில்லாத திருஅங்கிக்காட்சியின் ஞாபகார்த்தமாய் சுதந்திரஜேர்மனிய அரசாங்கம் ஓர்புதியஇனத் தபால் முத்திரையைப் பாவனைக்கு விடுத்திருக்கிறது. இந்தவெண்மையான திருஅங்கியின்பிரதிமை அந்தத்தபால் முத்திரையிலே ஓர்கருமையான சிலுவையின் மீது அமைந்திருக்கிறது. நீள்சதுரமான இந்தமுத்திரையைச் சூழவர அழகானஎழுத்துகளிலே காட்சியைப் பற்றியவிபரம் தரப்பட்டிருக்கிறது.

● ஞாயிற்றுக்கிழமைகளிலே அனுவசியமானவேலைகளை விலக்கும் இயக்கம் ஒன்றுக்கு ஜேர்மனிய கத்தோலிக்கவிவசாயிகள் முன்னணியில் நிற்கின்றார்கள். கத்தோலிக்கவிவசாயிகள் இயக்கத்தினதும், கத்தோலிக்கவிவசாய யுவர்கள் இயக்கத்தினதும் தேசிய தலைமைக்காரியாலயமானது "ஞாயிறு ஓய்வுநஷ்டம் உண்டுபண்ணுவதல்ல, ஆனல்,ஓர்ஆசீர்வாதம்" என்று தெரிவிக்கும் 15லட்சம்துண்டுப்பிரசுரங்களையும், 50ஆயிரம் சுவரொட்டிவிளம்பரங்களையும் பரப்பியிருக்கிறது.

# மலையிலேறிப் பிரஸ்தாபம்பெற்ற கருதினால் ஆண்டவர்

11-ம்பத்திநாத பாப்பானவர் ஓர்குருவாயிருந்தபோது ஐரோப்பாவின் மகாஉந்நதமான — 15,781 அடிஉயரமான மொண்பிளாங் மலைச்சிகரத்தில் ஏறிப் பிரஸ்தாபம்பெற்றார். சமீபத்திலே பேர்னின்நகர் மேற்றிராணியாரான கருதினால் டொப்வ்னர் ஆண்டவர் சுவிற்சர்லாந்திலுள்ள இந்தஉந்நதமான மலைச்சிகரத்தின்மீதேறிப் பிரஸ்தாபம்பெற்றிருக்கின்றார். திருச்சபையின் இளவரசர்களிலே அதிகம்இளவயதுள்ளவரும், 46வயதுடையவருமான இந்தக்கருதினால் அம்மலையடிவாரத்திலுள்ள கோர்மேயர்என்ற இத்தாலியபட்டினத்துக்குத் தமது பெயரை வெளியிடாது பயணஞ்செய்தார்.

தம்மோடுவந்த மூன்றுகுருமாரையும்போல மிருதுவற்ற மலையுடையை அணிந்தார். அல்பைனிய வழிகாட்டியான அல்டோ ஒலியர்என்பவரோடும், அவரின் புதல்வரோடும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மியேஜ்பனிப்படலத்தைநோக்கிப் புறப்பட்டார்கள். இரவானதும் கோனெல்லா குடிசையை அடைந்தார்கள். அப்போது அக்குடிசையிலே ஓஸ்ரா இராணுவ கலாசாலையிலிருந்துபோன அல்பைன்போர் வீரர்கள் குழுஒன்று தங்கியிருந்தது. அவர்கள் அந்தப்போர் வீரர்களுடன் வைக்கோலிலே நித்திரைசெய்தார்கள். மறுநாட் காலை 1-30மணிக்குக் கயிற்றினால் ஒருவர்ஒருவரைப் பிணித்துக்கொண்டு டோம்பனிப்படலத்தினூடாகப் புறப்பட்டார்கள்.

அது நிலாவொளிவீசும் இரவாயிருந்தது. அதனால் அவர்களுக்கு லாந்தர்வேண்டியிருக்கவில்லை. பனிப்படலத்திலுள்ள பிளவுகள் வழமையிலும் அதிககஷ்டம் விளைப்பதாக வழிகாட்டிகூறினார். காலை 8மணிக்கு அவர்கள் மொண்பிளாங் மலைச்சிகரத்தின் உச்சியை அடைந்தார்கள். தனது மலையேற்றகோஷ்டியிலே கருதினால்ஆண்டவர் இருப்பதாக வழிகாட்டியான ஒலியர் அறியாதிருந்தார். "அறிந்திருந்தால் கட்டளைகள் கொடுக்கும்போது கடுஞ்சொல்லான தொனியை உபயோகித்திருக்க மாட்டேன்" என்று பிந்தஅவர் கூறினார். ஆவணிமாதம் 16-ந்திகதியன்றே கருதினால்ஆண்டவர் அம்மலையில் ஏறினார். ஆனால், இதுசெய்தி சமீபத்திலேயே வெளிவரலாயிற்று.

### பெத்லகேமின் புதிய குருமடம்

தேவபாலகன் பிறந்த பெத்லகேமிலுள்ள 'இடையர்களின்வய'லில் சமீபத்திலே 'இடையர்களின் மாதா'பெயரால் குருமடம் ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது. லெபனன்நாட்டிலே பெய்ரூத்நகரிலுள்ள சென்சேவியர்குருமடத்தின் முன்னாள் தலைவரான வண. யோசெவ் டாக்னர் சுவாமியார் இதன் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். பரிசுத்தநாட்டுக்குத் தேவைப்படும் குருமாரைப் பயிற்றுவதும், கத்தோலிக்க திருச்சபைக்கும், அங்கிருந்துவருகின்ற பிரிவினைக் கிறீஸ்துவசபைக்குமிடையே ஓர் ஐக்கியபாலம் போன்று அமையக்கூடிய ஓர் ஸ்தாபனத்தை நிறுவுவதுமாகிய இருநோக்கங்களையும் பூர்த்திசெய்வதற்குப் பெத்லகேமைப் பார்க்கிலும் அதிகம்சிறந்த ஓர் இடத்தை வேறெங்காவது தெரிந்துகொள்ளமுடியாதென்று ஜெருசலேமின்மெல்க்கியபத்திறியாககுவிக்கார் தெரிவித்திருக்கின்றார்.

## வெற்றிக்கு நன்றி— பாரிய வெண்கலச் சுரூபம்

அருளப்பபாப்பரசர் சிலதினங்களின்முன் காஸ்தெல்காந்தல் போவிலே தமது படனசாலையிலிருந்த ஓர்பொத்தானை அழுத்தி அங்கிருந்து 300 மைல்தூரத்தில் தோர்த்தோனா பட்டினத்திலே ஸ்தாபிக்கப்பட்டிருந்த தேவதாயாரின்பாரியசுரூபம்ஒன்றைத் தீபாலங்காரஞ் செய்யலாயினர். பன்னிரண்டரைத்தொன் நிறைகொண்டதும், வெண்கலத்தால் செய்யப்பட்டதுமான இந்தச் சுரூபம் அப்போது தீபங்களால் பளீரிட்டொளிரலாயிற்று. ஏனெனில், அது பொன்மூலாமிடப்பட்டிருந்தது. அல்பான் குன்றுகளிலுள்ள தமதுவேனிற்கால மாளிகையிலிருந்து பாப்பரசர்ஒருவர் சுரூபம்ஒன்றை ஒளிவெள்ளக்கதிர் கொள்ளச்செய்தது இது இரண்டாம்முறையாகும். சென்ற வருடம் 12-ம்பத்திநாதபாப்பானவர் அவ்வாறு செய்திருந்தார். தோர்த்தோனா பட்டினத்திலுள்ள பரிசுத்த அடைக்கலநாயகியின் ஆலயத்தின்மேலாக 240 அடிஉயரமான கோபுரம்ஒன்றில் நிறுவிநிற்கும் இந்தப்பாரியசுரூபமானது அப்பட்டின மக்கள் செய்துகொண்ட வாக்குத்தத்தத்தைப் பூர்த்திசெய்துள்ளது. அப்போது நடைபெற்றுக்கொண்டிருந்த முதலாவது உலகயுத்தத்திலே இத்தாலி வெற்றிபெறுமானால் இந்தமாதிரியான ஓர்சுரூபத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்று தேவபராமரிக்கையின் புதல்வர்சபையை அடியிட்டவரான டொன்ஒறியோன் சுவாமியார் 1918-ம்ஆண்டு ஆலோசனை கூறினார். தமது சீவியகாலத்தின் கடைசிவருடங்களாகிய 1938-ம், 39-ம்ஆண்டுகளிலே அவர்மேற்றிராசனம்முழுவதும் சுற்றுப்பிரயாணஞ்செய்து இந்தச்சுரூபத்திற்கென்று செம்புசேகரித்துவந்தார். இங்கிலாந்திலிருந்து அவரதுநண்பர்கள் ஒருதொகையானசெம்பு அனுப்பிவைத்தார்கள். சுரூபத்தை ஸ்தாபிக்கும் கோபுரம் சென்றவருடம் பூர்த்தியடைந்து, சுரூபமும்தயாராயிற்று.

—✻—

## பிரிவினைச்சபையின் ஐக்கியத்திற்காகச் செபஞ்செய்கிறார்

இத்தாலியிலே புளோறென்ஸ் நகரின் முன்னைநாள் மேயரான திரு. ஜியோர்ஜியோ லா பிரு அவர்கள் இத்தாலிய கிறீஸ்தவ ஜனநாயககட்சியின் முதன்மைவாய்ந்த ஓர்அங்கத்தவராவர். இவர் சென்றஆவணிமாதம் 15-ந்திகதியன்று தேவதாயாரின் மோட்சாரோபணத் திருநாளன்று மஸ்கோநகரிலிருந்து 40மைல் தூரத்திலே சகோர்க்ஸ்எனுமிடத்திலுள்ள பிரிவினைச்சபைச் சந்நியாச ஆச்சிரமத்தில் இருந்துவருகின்ற அர்ச். ஜோர்ஜின் கல்லறையைச் சந்தித்து, ருஷியபிரிவினைச்சபை கத்தோலிக்க திருச்சபையுடன் ஐக்கியப்படுமாறு செபஞ்செய்யலாயினர். இத்தாலியிலே சமீபத்தில் நடந்தேறிய சர்வதேச மகாநாடுஒன்றுக்குச் சமுகமளித்திருந்த சோவியற் மேயர்ஒருவரது அழைப்பின் பேரிலே இவர்ருஷியாசென்றிருந்தார். இந்தக்கல்லறைக்கு இடையறாது யாத்திரைகள் நடந்துகொண்டிருக்கின்றனவென்றும், அங்கேசிலர் ஒருநாள்முழுவதும் மௌனமாக முழந்தாட்படியிட்ட வண்ணம் இருக்கிறார்களென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். ருஷியாவிற்குத் தமது விஜயத்தின் ஒரேயொருநோக்கம் சமாதானத்துக்கும், கிறீஸ்தஉலகின் ஐக்கியத்துக்குமாகச் செபஞ்செய்வதேயென்று அவர்தெரிவித்திருக்கின்றார். அத்துடன் தம்முடைய அதேகருத்துக்காகத் தம்முடன்சேர்ந்து மன்றாடிவருமாறு உலகிலுள்ள ஏகாந்தசபைகளைச்சேர்ந்த கன்னியாஸ்திரிமாரையும் கேட்டிருக்கின்றார்.

## போலாந்தகத்தோலிக்கபிள்ளைகளும் போலிஷ் ஞானோபதேசமும்

போலாந்திலுள்ள கத்தோலிக்க பிள்ளைகளுக்கெல்லாம் போலிஷ்ஞானோபதேசப் புத்தகங்கள் அனுப்பிவைக்குமாறு போலாந்தின் திருச்சபைமேலதிகாரியான கருதினால் விசின்ஸ்கி ஆண்டவர் செய்துள்ள வேண்டுகோளுக்கிசைந்து, குறைந்தபட்சம் ஐம்பதினாயிரம் பிரித்தானிய கத்தோலிக்கபாடசாலைப்பிள்ளைகள் முன்வந்து அவற்றைக் கொடுக்க வேண்டுமென்று லண்டன்நகரில் இருந்துவருகின்ற போலிஷிய நல்வாழ்வுக் கத்தோலிக்கசங்கம் வேண்டுகோள்விடுத்திருக்கிறது. பிரித்தானியில் தற்போது 1லட்சத்து 50 ஆயிரம் போலிஷ்கத்தோலிக்கர் இருந்துவருகின்றனர் இவர்களில் வெஸ்ற்மினிஸ்றர் மேற்றிராசனத்தில்மாத்திரம் 60 ஆயிரம்பேர் இருக்கின்றனர். இவர்களின் உதவியும் இப்போது வேண்டப்படுகிறது. "இன்று கம்யூனிஸ்த ஆட்சியில் இருந்துவரும் போலாந்து நல்வாழ்வு பெற்ற ஓர் நாடன்று; அங்கு போலிஷ்மக்களின் நல்வாழ்வுக்கென்று செய்யப்படுவதெல்லாம் கத்தோலிக்க குருமாராலேயே செய்யப்படுகிறது; அரசாங்க அதிகாரிகள் வறியவர்களுக்கு உதவிசெய்ய வகையறியாது அவர்களைக் குருமாரிடமே அனுப்பிவைக்கின்றார்கள்; திருச்சபையே அங்கு பசிப்பிணியால் வாடுகிறமக்களுக்கு உணவளிக்கின்றது; உடையற்றவர்களுக்கு உடையளிக்கின்றது; இவ்வாறெல்லாம் தொடர்ந்து செய்வதற்குப் போலாந்து வெளிநாடுகளிலுள்ள கத்தோலிக்கரின் உதவியிலேயே தங்கியிருக்கின்றது" என்று சமீபத்திலே போலாந்தைத் தரிசித்துத் திரும்பிய ஒருபிரமுகர் லண்டன்நகரில்நிகழ்ந்த கூட்டம்ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்; அதனால், போலிஷ் பிள்ளைகளுக்குத் தேவைப்படும் ஞானோபதேசப் புத்தகங்களையும், மற்றும்கத்தோலிக்கபுத்தகங்களையும் அங்குவிஜயஞ்செய்யும் பிரித்தானியகத்தோலிக்கர் கொண்டுசென்று உதவவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கின்றார்கள்.

—✻—

## இங்கிலாந்தின் மனந்திரும்புதலுக்காக ரோமர்கள் செபிக்கின்றார்கள்

கத்தோலிக்க திருச்சபையை விட்டுப் பிரிந்துபோன ஆங்கிலேயசகோதரர்கள் அதனுடன் திரும்பவும் ஐக்கியப்படுமாறு 13-ம்சிங்கராய பாப்பானவரால் விசேஷவிதமாய் இயற்றப்பட்ட செபம்ஒன்று ரோமாபுரியிலே காம்பிற்றெல்லி எனுமிடத்திலுள்ள அர்ச். மரியநாயகியின் கோவிலில் ஒவ்வோர் சனிக்கிழமை சாயந்தரமும் சொல்லப்பட்டுவருகிறது. இந்தக்கோவிலிலே போட்டிக்கோவிலுள்ள அர்ச். மரியாயின் — அதாவது "ரோமர்களின் அபயபுகலிட"மாகிய அர்ச். மரியாயின் திருசேத்திரம் இருந்துவருகிறது. இற்றைக்கு இருநூற்றுக்குமேற்பட்ட வருடங்களின்முன்னே 1947-ம்ஆண்டு இங்கிலாந்தின் மூன்றாவது ஜேம்ஸ்மன்னரும், யோக்கின் கருதினால் டியூக்கான அவர்புதல்வரும் ஒருங்குசேர்ந்து பிரிந்துபோன ஆங்கிலேயசகோதரர்கள் திருச்சபையின்மடியில் திரும்பவும் வந்துசேருவதாகிய அதே கருத்துக்காகச்சதாதிவ்வியபூசையும், தேவநற்கருணை ஆசீர்வாதமும் நடைபெறும்படியாக நிபந்தங்கொடுத்திருந்தார்கள்.

## புரட்டாசி மாதம்

பொதுக்கருத்து: கிறீஸ்தவகுடும்பங்களில் திருச்சபைக்காக உழைக்கும் உணர்ச்சி செழித்தோங்கும்படியாக வேண்டிக் கொள்வது.

வேதபோதககருத்து: தென் ஆபிரிக்க சாதிபேதச்சச்சரவு கிறீஸ்தவகொள்கைக்கொப்ப ஒதுக்கப்பட வேண்டுமென மன்ருடிக்கொள்வது.

* * *

## காலை ஒப்புக்கொடுக்கும் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

சத்திய வேத

# பாதுகாவலன்

1959-ம் ஆண்டு
புரட்டாசி மாதம் 24-ந் திகதி

## சீனதேச வேதகலாபனை

ரோமாபுரியிலே திருச்சபையின் ஆரம்பகாலத்தில் கிறீஸ்தவர்களாய் இருப்பதைமுன்னிட்டுத் தான்மரணதண்டனைவிதித்தவர்கள் சிந்தியஉதிரத்தைக்கண்டு கொடுங்கோலனை தியோக்கிளேசியன் சக்கிரவர்த்தி மகிழ்ச்சிகொண்டான். அந்தவேதசாட்சிகள் சிந்தியஉதிரவெள்ளத்தில் திருச்சபைமூழ்கித் திக்குமுக்காடி இறுதிகண்டுவிடுமென மனப்பால்குடித்துப் பெருமிதம்கொண்டான். ஆனால்,அவர்கள் சிந்திய உதிரந்தான் திருச்சபையைப் பிறப்பிக்கும் வித்தாகும்என்பதைத் தியோக்கிளேசியன் ஒருபோதும் அறிந்திலன். எந்தஒரு நூற்ருண்டிலேனும் எங்காவது ஓர்நாட்டில் வேதகலாபனையே இல்லாது திருச்சபை தப்பிக்கொண்டது அபூர்வமாகும். நமதுநூற்ருண்டிலுமே ஒன்றின்பின்ஒன்ருக அநேக வேதகலாபனைகளையும், வேதசாட்சியத்துவங்களையும் அதுகண்டிருக்கிறது.

செஞ்சீனஅரசாங்கமும் இந்த வேதசாட்சியத்துவங்களில் அநேகமானவற்றிற்குப் பொறுப்பாளியாகும். அமெரிக்கஆதரவாளர்கள், அதன் உளவாளிகளென்று கற்பனைசெய்து கத்தோலிக்கரையும், புரொட்டஸ்தாந்தரையும் அது இம்சித்துத் துன்புறுத்துகின்றது. ஆனால்,அதன் உண்மையானநோக்கம், எந்தக் கம்யூனிஸ்த நாட்டிலும்போன்று சமயத்தைமுற்ருக நிர்மூலமாக்கிவிட வேண்டுமென்பதேயாகும். சீனக்கம்யூனிஸ்தர்கள் இடையருது செஞ்சீனுவில்செய்துகொண்டுவரும் பயங்கரஅட்டூழியங்கள், நட்டணைகளைப்பற்றி அறியவரும்போது, நிகழும்இருபதாம்நூற்ருண்டிலும் இத்தகைய மனுத்தன்மையற்ற அரக்கர்கள் இருக்கிருர்களேஎன்று இரங்கவேண்டியிருக்கிறது. "சீனர்களான கம்யூனிஸ்தர்கள் சீனர்கள்அல்ல; அவர்கள் மனிதசென்மங்கள் அல்ல; ஆனால்,அவர்கள் உயிருள்ளபிசாசுகள்" என்று நாற்பத்திரண்டு வருடங்களாகச் சீனுவில் தொண்டாற்றிய ஒருபெல்ஜிய குரவரான வண. வின்சென்ற் லெபேசுவாமியார் அறிவித்திருக்கின்ருர். இவர் செஞ்சீனச்சிறைச்சாலைஒன்றில் இருந்துவரும்போது உண்டான நோய்காரணமாக மரணிக்குமுன்கூறிய ஈருந்தமொழிகள் இவைகளேயாகும்.

நிகழும்நூற்ருண்டிலே சீனுவில் வேதகலாபனை 1911-ம்ஆண்டுமுதலே—அதாவதுசீன ஓர்குடியரசாகப் பிரகடனஞ்செய்யப்பட்டுப் பெரும்விஸ்தாரமான அத்தேசமுழுவதிலும் உள்நாட்டுக்கலகம் உண்டானகாலமுதலே அலைமேல்அலை எழுந்தாற்போல நடந்துகொண்டு வந்திருக்கிறது. கடைசியாக நாஸ்திக கம்யூனிஸம் அங்கு காலூன்றியதுமுதல் இந்தவேதகலாபனை குரூரத்தனமானமுறையிலே உச்சநிலைஅடைந்து மேற்றிராணிமார், குருமார், சந்நியாசகர், கன்னியாஸ்திரிமார், சாதாரணகிறீஸ்தவர்களின் குருதியை உறிஞ்சிக் குடித்தவண்ணம் இருக்கின்றது. இன்று சீனக்கம்யூனிஸ்தர்களின் முழுநோக்கமும், முயற்சியும் அந்தப்பாரிய தேசத்திலுள்ள மேற்றிராணிமார், குருமாரெல்லாம் பரிசுத்தஸ்தானத்துடன் கொண்டுள்ள விசுவாச பிரமாணிக்கத்தை ஒழித்து, ஓர்பிரிவினைச்சபையை அங்கே ஸ்தாபித்து, மறுவிஷயங்களில்போன்று சமயவிஷயங்களிலும் மதநம்பிக்கையற்றவர்களும், சகலமதங்களினதும் சென்மசத்துராதிகளென்று தங்களைப்பிரசித்தப்படுத்துகிறவர்களுமான தங்களது குதிக்காலின்கீழ் அவர்களையெல்லாம் சரணுகதியடையச் செய்வதேயாகும். சுமார்இருபது ஆண்டுகளுக்குமேல் இந்தஎடுப்பில் சீனு ஈடுபட்டும் வெற்றிகண்டிலது. கடைசியாகஆற்ருது இந்தப்பிரிவினைச்சபையை ஸ்தாபித்துவிடுவான் ஒருகை பார்க்கிறதுதானென்று 1951-ம்ஆண்டுமுதல் எடுக்காதஎடுப்பெல்லாம் செஞ்சீனஅரசாங்கம் எடுத்துவந்தும், பெரியஏமாற்றமெல்லாம் செய்துவந்தும் கருமம்இன்னுமே கைகூடியபாடில்லை.

---

## மறைந்த தமிழ்ச்சிங்கம்

தமிழ்ப்பெருந்தலைவர்களில் ஒருவராய், பாராளுமன்றத்திலே கோப்பாய்த்தொகுதிப் பிரதிநிதியாய், தமிழரசுக்கட்சியின் முன்னுள்தலைவராய், அக்கட்சிக்குப் பெருமைவாய்ந்த வச்சிரத்தூண்களில் ஒருவராய், மலையேகலங்கினும் மனமேகலங்காத மனேதிடம்படைத்தவராய், விளங்கித் தமிழ்மக்களின் சுபீட்சத்துக்கும், சுதந்திரத்துக்கும், தமிழ்மொழிக்கும், தமிழ்க்கலாசார பண்பாடுகளுக்குமாகத் தமது உடல், பொருள், ஆவி மூன்றினையும் தியாகஞ்செய்து அல்லும்பகலும் அயராது, மனஞ்சலியாது, உழைத்துவந்தவரான திரு. சி. வன்னியசிங்கம்அவர்கள் சென்ற வியாழக்கிழமை எதிர்பாராதவிதமாய் மரணத்திரையில் மறைந்தாரென்னும் அமங்கலசெய்தியாலே ஈழத்தமிழுலகம் கவலைஎன்னும் கார்மேகத்தாலே கவியப்பெற்றுத் துயரக்கடலில்மூழ்கிச் சோகமே உருவெடுத்தாற்போன்று கலங்குவதாயிற்று. ஆம், ஈழத்தமிழினம் தனது மாபெரும் தலைவர்களில் ஒருவரை அந்தோ இழந்தது! தமிழர்தம் முன்னணித் தலைவர்களில் ஒருவரின் மறைவாலே ஈழத்தமிழகம் அம்மம்ம! பரிகரித்தற்கரிய நஷ்டம்அடைந்தது. ஓர்இளஞ்சிங்கம்போன்று பாராளுமன்றத்திலும், பகிரங்ககூட்டங்களிலும் தமிழ்மக்களுக்காகப் பன்னீராண்டுகளாய் வீரத்துவமாகவாதாடிப் போராடிவந்த வன்னியசிங்கமென்ற தமிழ்ச்சிங்கத்தைத் தமிழ்மக்கள் இழந்துஅன்று கண்ணீர்உகுத்துநின்ற கண்ணருவியான காட்சி எவரையுமே மனமிரங்கச் செய்வதாயிருந்தது. சேர் குமாரசாமி, சேர்பொன். இராமநாதன், சேர்பொன். அருணுசலம், சேர்அம்பலவாணர் கனகசபை, திரு. ஏ. சபாபதி திரு. கே. பாலசிங்கம் திரு. எச். ஏ. பி. சந்திரசேகரா, என்பவர்களாய் எத்தனையோ தமிழ்ப்பெருந்தலைவர்கள் காலந்தோறும் தோன்றித் தமிழ்மக்களுக்கு அளப்பருஞ்சேவைகள் ஆற்றிவந்து கடைசியாகத்தங்கள் பூதவுடம்புமறைந்தும் புகழுடம்பு மறையாது பெருமையுற்றுத் திகழ்கின்ருர்கள். ஆனால், இவர்களெல்லாம் நீடியஆயுசுகண்டு, தமிழ்மக்களுக்கு நிறைந்தசேவை செய்தோமென்ற மனப்பாங்குடன் மறைந்தவர்கள். ஆனால், திரு. வன்னியசிங்கம்அவர்களோ தமிழ்மக்களுக்காக இன்னும் எத்தனையோஆண்டுகள் உழைக்கக்கூடிய இளவயதிலே— தமது48-ம் வயதிலே மறைந்தமையானது, எவரையுமே மனமுருகச்செய்வதாகும். இலங்கையிலே தமிழர் கள்வதியும் நகர்கள், பட்டினங்கள், கிராமங்களெல்லாம் திரு. வன்னியசிங்கம்அவர்களின் மறைவால்உண்டான பெருந்துயராலே கறுப்புக்கொடிகள் ஏற்றியும், அனுதாபக் கூட்டங்கள் நடாத்தியும் அன்று மாத்திரமல்ல, இன்றுமே துக்கங்கொண்டாடுகின்றன. நமது பெருந்தலைவர் இன்னும்சிலவருடகாலம் சீவனேடிருந்தாரில்லையே என்றுதான் இன்று தமிழினம் சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தாகுலக்கடலில் ஆழ்ந்திருக்கின்றது. தமிழுலகிற்கு ஒருபெருந்தலைவரைத்தந்த அவர்குடும்பத்துக்கு எமது அனுதாபம் உரித்தாகுக!

---

## ஐந்துகச்சேரிகளில் சிங்களம்

வடமாகாணத்திலும், கிழ்மாகாணத்திலுமுள்ள ஐந்துகச்சேரிகளிலும் படிப்படியாகச் சிங்களமூலம் நிர்வாகத்தைநடத்த அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அவற்றிலே இப்போது ஆங்கிலத்தில்தான் நிர்வாகம் நடைபெற்றுவருகிறது. இந்தமாற்றம் படிப்படியாகத்தான் நடைபெறுமென்றும், தமிழிலே கடிதம்எழுதுகிறவர்களுக்கு அதேமொழியில் பதில் அனுப்பும் தற்போதையஒழுங்கு பாதிக்கப்படமாட்டாதென்றும் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்ருர். முதலில் அரசாங்கபகுதிகளுக்கிடையே நடைபெறும் கடிதப்போக்குவரத்துகள்தான் சிங்களத்தில்நடைபெறுமென அவர்விளக்கம் கொடுத்திருக்கின்ருர்.

---

நிகழும் புரட்டாசி மாதம் 17-ந் திகதி வியாழக்கிழமையன்று காலஞ்சென்ற தமது அருமைத் தாயாரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்ருடிக்கொள்ளுமாறு தமது சகோதர குருப்பிரசாதிகளையும், ஞானமக்களையும் வண. எச். ஜெலான்ட் சுவாமியவர்கள் பரிவாகக் கேட்டுக்கொள்ளுகின்ருர்.

---

### சோலிசிற்றர் ஜெனறல்

1957-ம்ஆண்டு சித்திரைமாதம் 1-ந்திகதியன்று தற்காலிக சொலிசிற்றர் ஜெனறலாக நியமனஞ்செய்யப் பெற்றிருந்தவரான திரு. எம். திருச்செல்வம்அவர்கள் தமதுஉத்தியோகப்பதவியிலே தற்போதுநிரந்தரமாக நியமனஞ் செய்யப் பெற்றிருக்கிருர். 1923-ம் ஆண்டு பரிஸ்றர்பரீட்சையில் அரங்கேறியஇவர் 1942-ம்ஆண்டு நீதிப்பரிபாலனசேவையில் சேரலாயினர்.

### நூல்நிலையத் திறப்புவிழா

யாழ்ப்பாணநகரிலே கட்டப்பெற்றுவரும் புதியபொதுநூல்நிலையத் திறப்புவிழாவை வருகிறஐப்பசிமாதம் 12-ந் திகதி திங்கட்கிழமை நடத்துவதென்று யாழ்ப்பாணநகரசபையின் மாதாந்தகூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனை மேயரேதிறந்துவைக்க வேண்டுமென்று அக்கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

### கள்ளக்குடியேற்றகாரர்

இவ்வருடத்திலே தினமும் சுமார் பத்துப்பேர்வீதம் இந்தியாவிலிருந்து இலங்கையில் சட்டவிரோதமாய்க் களவிலே பிரவேசிக்க முயன்றபோது கைதுசெய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இம்மாதம்16-ந்திகதி வரையிலே கைதுசெய்யப்பட்டுள்ள கள்ளக்குடியேற்றகாரர் 2,3,92பேராவர். இத்தொகை சென்றவருடத்திலும் மும்மடங்குஅதிகமாகும். சென்ற வருடம் 842பேர் சட்டவிரோதமாக வந்திறங்கியுள்ளனர். கைதுசெய்யப்படும் ஒவ்வொருஆண் அல்லது பெண்ணுக்கும் குறைந்தபட்சம் நான்கு அல்லதுஐந்துபேர் நாட்டினுள் நழுவிவிடுகின்ருர்களாம்.

### புதியமுறையில் பிறப்புப்பத்திரம்

இதுவரை பிறப்புப்பத்திரம் என்ருல் என்னவென்றேதெரியாத மக்களுக்கு இப்போது பிறப்புப்பத்திரம் கிடைக்க அரசாங்கம் வசதிசெய்திருக்கிறது. பிறந்ததிகதி, இடம்பற்றிய மூலப்பதிவுகள் இல்லாதிருப்பினும் றெஜிஸ்திருர் ஜெனறல்பகுதி நன்குபரிசீலனை நடத்தியபிறகு பிறப்புப்பத்திரம் அளிக்கிறது. பிறப்புப்பத்திரம் இல்லாததால் வேலையில்லாது திண்டாடுகிறவர்களுக்கு உதவியளிப்பதே இப்புதியசேவையின் நோக்கமாகும். ஏற்கனவே பெருந்தொகையானேர் இந்தவசதியைப் பயன்படுத்தியிருப்பதாக றெஜிஸ்திருர் ஜெனறல் தெரிவித்திருக்கின்ருர்.

### தமிழ்மொழியில் பொலிஸிகள்

வகுப்புவேற்றுமையும், மொழிப்பிரச்சினையும் இன்றுதாண்டவமாடும் இலங்கையிலே ஓர்இன்சூறன்ஸ்கம்பெனி தமிழ்மொழியில் பொலிஸிப்பத்திரங்கள் வழங்குகிறதென்ருல் அது தமிழ்மக்களின் ஏகோபித்தஆதரவைப் பெறுமென்றே சொல்லலாம். "கொழும்பு ஆயுள்அஷ்யூறன்ஸ்"கம்பெனியாரால் ஆயுள்இன்சூறன்ஸ் பொலிஸிகள் இப்பொழுது தமிழ்மொழியில் வழங்கப்படுவதாகத் தெரியவருகிறது. தமிழுலகிலேயே முதன்முதலாக இன்சூறன்ஸ்பத்திரங்கள் தமிழில் வழங்கும்கம்பெனி தமிழ்மக்களின் பாராட்டைப்பெறவேண்டியதே.

# கண்டதும் கேட்டதும்

## நேர்மையில்லாக் குணம்

"இந்நாட்டில் நேர்மை என்பது மிக அரிதாகவே காணப்படுகிறது. நாட்டின் தலைவர்கள்தானும் இந்தவழியில் பொதுமக்களுக்கு முன்மாதிரி காண்பிப்பதாகத் தெரியவில்லை."

**திரு. பிறெட் அலெஸ்,**
கண்டி மஜிஸ்றேற்.

## கட்டுப்பாடற்ற சுதந்திரம்

"இந்த அரசாங்கம் இந்நாட்டு மக்களுக்குக் கட்டுப்பாடற்ற சுதந்திரத்தை வாரிவழங்குகிறது. பண்டாரநாயகா அரசாங்கத்தைவிட வேறெந்தஅரசாங்கமும் பொதுமக்களுக்கு இவ்வளவு சுதந்திரங்களை அளிக்கமாட்டாது."

**திரு. டி. பி. இலங்கரத்ன,**
உள்நாட்டுமந்திரி.

## பேனவேண்டாம் — ஏர்பிடியுங்கள்

"படித்த வாலிபர்கள் பேனு பிடிப்பதையே பெரும்பாக்கியமென்று கருதிவந்தகாலம் மலையேறிவிட்டது. ஏர்பிடிக்கும் கையினால்தான் பொருளாதாரத்துறையில் விமோசனம் கிடைக்குமென்ற நல்லுணர்ச்சி இளைஞர்கள் மனதில் உதித்திருக்கிறது."

**திரு. என். சிவபாதம்,**
பத்தைமேனி.

## கஷ்டங்களில் பிரதானகஷ்டம்

"தமிழ்ச் சமூகத்தினரிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தால் துவேஷம் தோன்றி நாம் பல்வேறு கஷ்டங்களுக் குள்ளானோம். அவற்றில் பிரதானமானது, அதிகார வர்க்கத்தினர் சிறுபான்மை வகுப்பினரிடையே தனிச்சிங்கள சட்டத்தைத் திணிக்க முயல்வதென்றே சொல்லக்கூடியதாய் இருக்கிறது."

**திரு. கே. கனகரத்தினம்,**
முன்னைநாள் எம். பி.

## அரசாங்கத்தால் முடியாது

"இந்நாட்டில் எஸ். எஸ். சி. படித்த வாலிபர்களில் பெரும்பாலானோர் ஆசிரியர்களாகவும், கிளாக்குமாராகவும் இருக்கவே விரும்புகிறார்கள். அத்தகைய ஒருலட்சம் வாலிபர்களுக்கு உத்தியோகம் கொடுக்க அரசாங்கத்தால் முடியாது."

**பிரதமர் பண்டாரநாயகா**

## ஐ. தே. கட்சியை அண்டுகிறார்களாம்

"அடுத்ததேர்தலில் ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி அரசாங்கத்தின்கதி என்னவாகும்என்பதுஒருவருக்கும்தெரியாது. பிரதமர் பண்டாரநாயகா ஐக்கிய தேசீயக்கட்சி (யு. என். பி.) யைப்பற்றி என்ன தான்கூறியபோதிலும் அவருடையகட்சியைச் சேர்ந்தவர்கள்பலர் என்னிடம்வந்து தங்களையும் ஐக்கிய தேசீயக்கட்சியில்சேர்ந்து அடுத்ததேர்தலில் போட்டியிடவிடுமாறு என்னைக் கேட்கின்றார்கள்."

**திரு. டட்லி சேனநாயகா**

## மனிதன் புரிந்துகொள்ளவில்லை

"அமெரிக்கா, ருஷியா ஆகியநாடுகளில் விஞ்ஞானஅறிவு மின்வெட்டு வேகத்தில் முன்னேறுகின்றது. றொக்கற்அனுப்பிச் சந்திரனைத்தாக்கும் அளவிலும் மனிதன் முன்னேறிவிட்டான். ஆனால், சமாதானசங்கநாதம் ஒலிக்கச் சாந்தநிலையில் வாழ்வதுஎப்படி? என்பதையேஅவன் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. வாழத்தெரியவில்லை. வேதனைகள் தீரவில்லை. விஞ்ஞான அறிவில் உன்னதஸ்தானத்தை அடைந்துள்ள பெரியவல்லரசுகள் அழிவுச்சக்திமிக்க அணு, சலவாயுக்குண்டுகளைத் தாராளமாக உற்பத்திசெய்துள்ளன. விஞ்ஞான அறிவிற்கேற்பத் தார்மீகப்பண்பும் ஓங்கவேண்டும். மனிதாபிமானத்துடன் உலகசமுதாயம் வாழவேண்டும்."

**பிரதமர் பண்டாரநாயகா**

## கல்விமந்திரி பாராட்டுகின்றார்

"கத்தோலிக்க பாடசாலைகள் இந்நாட்டின் கல்வியின்முன்னேற்றத்திற்கு எவ்வளவோசேவைகள் செய்துள்ளன. காலியிலுள்ள திருஇருதயமாதா கல்லூரி தென்பகுதிக்குமட்டுமல்ல, இலங்கைக்கே ஓர்முன்மாதிரியாக அமைந்துள்ளது. நான் சென்ற் அலோஷியஸ் கல்லூரியில் ஓர்ஆசிரியனாய் இருந்த காலத்திலே கற்பிப்பதிலும் கூடுதலான விஷயங்களை அக்கல்லூரியிலிருந்தும், அதிபர் முதலானோர்களிடமிருந்தும் கற்றுக்கொண்டேன் என்பதைக்கூற மகிழ்ச்சியடைகின்றேன்."

**திரு. டபிள்யு. தஹநாயகா,**
கல்வி மந்திரி.

## தமிழினம் ஒன்றுபடவேண்டும்

"இலங்கைவாழ் தமிழ்மக்கள் இன்று இனஉரிமை, மொழிஉரிமை, நிலவுரிமை அற்றவர்களாகக் காட்சியளிப்பதன்காரணம், தமிழினம் பண்டைக்கால இலக்கியங்களையும், பண்பாட்டையும் கடைப்பிடியாமையேயாகும். தமிழன் எங்குவாழ்ந்தாலும் அவன் மொழியால், கலையால், கலாசாரத்தால் ஒன்றுபட்டவனென்ற உன்னதலட்சியத்தை மனதில்பதியவைத்து எல்லோரும் ஒன்றுசேர்ந்து உரிமைப்போராட்டத்தில் குதிக்காவிட்டால் எமதுவருங்காலச் சந்ததிகளின் முன்னேற்றம் ஆபத்துடையதாய் இருக்குமென்பதில் கொஞ்சமேனும் ஐயமில்லை. இவ்வித ஆபத்தைத் தடைசெய்யச் சிதறுண்டு கிடக்கும் தமிழினம் ஒன்றுபட்டுச் செயலாற்ற முன்வரவேண்டும்."

**திரு. வி. என். நவரத்தினம்,**
சாவகச்சேரி எம். பி.

## மின்சாரத்தைப் பயன்படுத்துக

"வீட்டுக்குமாத்திரம் மின்சாரத்தை உபயோகித்துத் திருப்தியடைந்து கொள்ளாமல் விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றின் அபிவிருத்திக்கும் அதனைப்பயன்படுத்தி வடமாகாணத்தின் பொருளாதாரத்தைப் பெருக்க வேண்டும்."

**திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்,**
காங்கேசன்துறை எம். பி.

## நூறுரூபாகிடைத்தாலும் கவலையில்லை

"இன்றுநான் ஒருமந்திரியாக இருக்கின்றேன். ஆனால், ஒருசமையம் நான் மந்திரிபதவியைத் துறக்கநேர்ந்தாலும் மகிழ்ச்சியுடன் ஆசிரியத்தொழிலை ஏற்றுக்கொள்வேன். மாதம் நூறுரூபா சம்பளம்கிடைத்தாலும் கவலைகொள்ளேன். இன்று இலங்கையில் அறுபதினாயிரம் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். ஒருகிராமத்தில் கோயிலும், பாடசாலையும்தான் முக்கியமானவைகள். ஆகையால் அக்கிராமத்திலுள்ள ஆசிரியரும், மதகுரவரும் சிறந்தவர்களாய் இருந்தால் அந்தக்கிராமம் முன்னேறுவது நிச்சயம்."

**திரு. டபிள்யு. தஹநாயக்கா,**
கல்விமந்திரி.

## சிங்களமக்களில் வெறுப்பில்லை

"இன்றுதமிழினம் தனதுஉரிமைகளைஇழந்து தவிக்கின்றது. தான் இழந்தஉரிமைகளைப் பெறுவதற்காக அரசாங்கத்துடன்தான் அதுபோராடுகின்றது. சாதாரண சிங்களமக்கள்மேல் எத்தகையவெறுப்பும் எமக்கில்லை."

**திரு. என். ஆர். இராசவரோதயம்,**
திரிகோணமலை எம். பி.

## அரசாங்கமே கிளப்பிவிட்டது

"பாஷைப்பிரச்சினையை எடுத்துக் கொண்டால் யார்இதனைக் கிளப்பியது? பதவிக்குவர ஆசைப்பட்ட அரசாங்கம் தான் 24மணிநேரத்தில் சிங்களத்தை உத்தியோகமொழி ஆக்குவதாகக்கூறி இந்நாட்டில் மொழிப்பிரச்சினையைக் கிளப்பிவிட்டது. 24மணிநேரத்தில் சிங்களத்தைமாத்திரம் உத்தியோகமொழியாக்க விரும்பிய அரசாங்கம் சிறுபான்மையினரின் விருப்பமின்றியே அதனைச்செய்ய முன்வந்தது. வகுப்புவாதத்தைக் கிளப்புவதினால் சிறுபான்மையினர், பெரும்பான்மையினரிடையே இருந்துவரும் பிரச்சினைகளைத் தீர்த்துவிடமுடியுமா? இருசமூகத்திற்குமிடையே சௌசன்யசூழ்நிலை ஏற்படாதவரை நாட்டில்அமைதி ஏற்படமுடியாது."

**செனற்றர், எஸ். நடேசன்.**

---

# குடும்பசெபம்— சிறந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளென்று சொல்ல இயலுமா? குடும்பஇல்லம் வேறுவழியில் அமைக்கப்படவேண்டும்.

இல்லம் உண்மைஇல்லமாகத் திகழவேண்டுமேயானால், சூரியவெளிச்சம், சுத்தஆகாயமாகிய கடவுளதுவரம், அவரதுஆசீர், அவர்அளிக்கும் ஞானக்கொடைகள் அங்கு கூடியிருக்கவேண்டும். இவைகளை அடைவது குடும்பசெபத்தினால்தான். பணத்தைக்கொண்டு கட்டடம்எழுப்பலாம். ஆனால்,பணம் நல்லகுடும்பத்தை அமைக்காது. செபமே—அதுவும் குடும்பசெபமே கிறீஸ்தவகுடும்பத்தை உண்டுபண்ணும்.

இல்லமானது ஓர்அர்ச்சிக்கப்பட்ட இடம். கடவுளின் சாயலான ஆன்மாவையுடைய மனிதன்பிறக்கிறான் அந்தஇல்லத்தில். அந்தஇடத்திலேயே முதன்முதல் தன்கதியை அறிகிறான். புண்ணியத்தில் ஆன்மாவளர்கிறது. அந்தஇல்லம் ஓர்ஆலயம். இஸ்பிரீத்துசாந்துவானவர் வரப்பிரசாதம், அருள், தமது கொடைகளுடன் வீற்றிருக்கிறார். குடும்பம் பரிசுத்தமாயிருந்தால் ஆலயமானது ஓர்செபக்கூடம். மிகுந்த பலனளிக்குஞ்செபம் குடும்பசெபமே. "எங்கே என் நாமத்தினால் இரண்டு அல்லது அதற்குமேற்பட்டவர்கள் கூடியிருக்கின்றனரோ அவர்கள்மத்தியில் நான்இருக்கின்றேன்" என்று விளம்பினார்யேசுபெருமான்.

பெற்றோரும், பிள்ளைகளும் ஒன்றுகூடுவது இயற்கையே. ஆனால், ஆண்டவரின்நாமத்தினால்—அதாவதுசெபத்தின்மூலம் கூடுவராகில் அவர் அங்கேஇருப்பார். செபமே ஆன்மாவைச் சாத்தான் கவ்விக்கொண்டு போகாதபடி பாதுகாக்கும். கனமானபாவத்தில் விழாவண்ணம் காப்பாற்றும். குடும்பத்தில்சிலர் ஆன்மவிஷயத்தில் அசட்டையாயிருந்தால், பிறருடையநன்மாதிரிகை அவர்களுக்கு நல்வழிகாட்டும், வேதவிஷயத்தில் உற்சாகம்ஊட்டும். குடும்பசெபம் ஒருவருக்கொருவர் உதவிபுரிய ஏற்றதுணையாயிருக்கும். பரிசுத்தமாய்ச் சீவிக்க, விசுவாசத்தில் தளராதிருக்க உதவியாகும் குடும்பசெபம். குடும்பவாழ் இல்லம் ஆசீர்வதிக்கப்பட்ட இடமாய் எப்போதுமே ஆசீர்வதிக்கப்பட்டதாய்த் துலங்கக் குடும்பசெபத்தைக் கைவிடாதீர்கள். விசேஷமாய்த் திருச்செபமாலையைக் குடும்பத்துடன் சொல்லிவர மறந்திடாதீர்கள்.

> **"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

---

# ஆசிரியர்களின் ஞானவொடுக்கம்

இவ்வாண்டு ஐப்பசிமாதம் 21-ந் திகதி புதன்கிழமை பின்னேரந்தொடக்கம் 25-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலைவரைக்கும் மருதமடுத் திருப்பதியில் ஆசிரியர்களின் ஞானவொடுக்கம் நடைபெறும்.

இதில் பங்குபற்றவிரும்பும் ஆசிரியர்கள் நமக்கு அறிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

கொழும்புத்துறைத் தாபனத்தில் நடைபெற்ற ஞானவொடுக்கத்தில் பங்குபற்றாத ஆசிரியர்கள் எல்லோரும்இந்த ஞானவொடுக்கத்தில்பங்குபற்றும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

PHILIP PONNIAH,
Gen. Manager, R. C. Schools
Jaffna, 22-9-59.

---

# சீனாவில் நடப்பதென்ன?

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் பள்ளிகளுக்கும், மற்றவர்கள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட வேலையிடங்களுக்கும் செல்ல வேண்டும். மத்தியானஉணவுக்கு அரைமணிநேரம் ஒதுக்கப்படும். மறுபடியும் உடனே ஆரம்பிக்கும் வேலை இரவு9மணிக்கு முடிவுபெறும். 9மணிக்குச் சாப்பாடு. அதன்பின் இராவேலைக்குக் குறிக்கப்படாதவர்கள் (இரவு சாமம் கடந்தும் மின்சார விளக்குகளுடன் வயல்வேலைகளும் நடத்தப்படும்.) சாப்பிட்டதும் கம்யூனிஸ்த பாடபோதனை கேட்கச் செல்லவேண்டும். அதன்பிறகே உறக்கம்.

ஒவ்வொருநாள் இரவிலும் இத்தகையபாடபோதனைகள் நடைபெறுகின்றன. இந்தக்கம்யூன் வாழ்க்கை உங்கள்வாழ்விலே மிகவும்புரட்சிகரமானது. குடும்பங்களை இங்ஙனம் நாம் உடைத்தெறிந்துவிட்டோம். கம்யூன்களே உங்கள் புதிய இல்லம். இதனால் பெண்களுக்கு வீட்டு வேலைகளிலிருந்து விடுதலையளிக்கப் பட்டிருக்கிறது. பிள்ளைகள் அரசாங்கத்தால் நல்லமுறையில் வளர்க்கப்படுவார்கள். குடும்பம், குடும்பம்என்ற குறுகியகட்டுப்பாடு இப்போது நீங்கிவிட்டதே. எல்லாச்சொத்தும் பொதுவான கம்யூன் சொத்தாகிவிட்டது. குழந்தைகளைக் குடும்பங்கள் தான் வளர்க்கவேண்டுமா? ஆயிரக்கணக்கான வருடங்களாக இருந்துவந்த குடும்பவாழ்க்கை முறையை நாம்உடைத்துவிட்டோம். இனிஉங்கள்வீடுகளில் உங்களுக்கு எதுவுமேஇருக்காது. கம்யூனேஉங்கள்வீடாகிவிட்டது.

கடினமான உழைப்பிலிருந்து இம்மக்களுக்கு விடுதலைகிடைக்கும்நாள் தேசிய பெருநாட்கள் மட்டும்தான். அந்நாட்களில் எல்லோரும் மந்தையாகப் பொதுமைதானங்களுக்கு இட்டுச்செல்லப்படுவார்கள். அங்கு முழுநேரமும் சீனாவின் மகத்தானசாதனைகளைப்பற்றிப் போதனைநடக்கும்.

வளரும்.

---

## மந்திரியை அழைக்கமுடிவு

யாழ்ப்பாணநகரின் அவசியதேவைகளை எடுத்துக்காட்டுமுகமாகத் தலதாபனமந்திரி திருமதிவிமலா விஜயவர்த்தனவை யாழ்ப்பாணத்துக்கு அழைப்பதென்று யாழ்ப்பாணநகரசபையின் மாதாந்தகூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

## மட். தாண்டவன்வெளித் தபால்

# தேவமாதாவின் பிறந்ததினம்

"தாயார்சுபதினம் சேயர்மகிழ்தினம்" என்பதற்கொப்ப நமது தாண்டவன்வெளிப்பங்கின் பாதுகாவலான தேவமாதாவின் பிறந்ததினத்தை இப்பங்கினர் நிகழ்மதி 8-ம்நாள் மங்கலகரமாகக் கொண்டாடினர். ஆலயமணிகளின்ஆரவாரம். அன்றுஅலர்ந்த நறுமணமலர்க்கொத்துகளுடன் கிளெண்ணி ஆண், பெண்கழகத்தினர், பத்திச்சபையினர் ஆலயத்தில்கூடினர். இளந்தென்றல் மெதுவாக அம்மலர்களிடையே தவழ்ந்து தவழ்ந்து நறுமணத்தை விரிவிப் பரவிக்கொண்டிருந்தது. தேவதாயாரின் திருச்சுரூபம மக்களின்அன்பளிப்புகளை அரவணைக்கும்பாணியில் அழகுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்த பீடத்தில் காட்சிதந்தது. ஆலயத்தில் கூடியிருந்தாரனைவரும் கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகள் தலைமையில் "ஏற்பீர் அம்மா தாயே" என்னும்கீதத்தைப் பாடினர்.

ஈதோ பூச்செண்டுகள்
எங்கள் இருதயங்கள்போல்
மாதாவே வாங்கிநீர்
திருமகனிடம் கொடும்

என்று பாடிக்கொண்டே அணியணியாகப் பிள்ளைகளும், பக்திச்சபையினரும் தத்தம்மலர்க்கொத்துகளை மாதாவின்பாதத்தில் சாத்தினர். இம்மனோபாவனை நிகழ்ச்சியின்பின்னர் திவ்விய பலிபூசை நிறைவேற்றப்பட்டது. பெருந்திரளானோர் திருவிருந்தருந்தித் திருநாளைச்சிறப்பித்து மகிழ்ந்தனர்.

பரிசுத்த வியாகுலமாதா திருநாள்: நமது பங்குத்தேவாலயத்தின் பலிபீடத்தைப் பொலிவுடன் விளங்கச் செய்வது பரிசுத்த வியாகுலத்தாயின் திருச்சுரூபம். இந்தஆலயமும் இத்தாயின்பெயரால் அழைக்கப்பட்டுவருவது பாரம்பரியமானது. நமது வியாகுலஅன்னைபெயரால் ஓர்பத்திச்சபை ஸ்தாபிக்கப்பட்டுப் பல்லாண்டுகளாக அச்சபையின் உபயத்தில் வருடாவருடம் விழாக்கொண்டாடிவரும் வழமையைமேற்கொண்டு இம்மதி 15-ம் நாளாகிய திருநாளுக்கு முன்தினம் மாலை 6-30மணிக்கு வியாகுலமாதா பத்திச்சபையினர் தத்தம்சின்னங்கள், கொடியுடன் கூடினர். திரளானகிறீஸ்தவர்கள் தங்கள்வியாகுலங்களை ஒப்படைக்கவும், அன்னையின்வியாகுலங்களை உள்ளத்தில்உறுத்தவுமாகச் சமுகமளித்திருந்தனர்.

செபமாலை, பிரார்த்தனையின்பின் சபை அங்கத்தினர் நால்வர்நால்வராக முறையே திருச்சுரூபகேடயத்தைத் தாங்கிச்செல்ல, சமயாசாரவரிசைகளுடன் ஆலய வீதிவழியே சுற்றுப்பிரகாரம் நடைபெற்றுத் திருச்சுரூபம் ஆலயத்தைஅடைந்ததும் மாலை ஆராதனை பாடித்திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும், திருச்சுரூப ஆசீர்வாதமும அருளப்பட்டன. திருநாள்தினமன்றுகாலை பத்திச்சபையினர், பங்குக்கிறீஸ்தவர்கள் பெருந்திரளாகக் கூடியிருக்க, திருநாட்பாடற்பூசை நிறைவேறியது.

பூசைமுடிவில் வியாகுலமாதா பத்திச்சபையினர் ஒன்றுகூடிக் கட்டளைக்குரவர் இல்லம்சென்று, அவரைச்சந்தித்து, இன்னுரையாடி, அன்பளிப்புகள் அளித்து, நல்லுரைகேட்டு நின்றனர். குரவர் அவர்கள் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் "யேசுபெருமானின் பாடுகள்" என்னும் புத்தகமும், படமும் வழங்கி எல்லோரையும் ஆசீர்வதித்து நின்றார். — நிருபர்

—※—

## உபகாரமாதா திருநாள்

13-ம்நூற்றாண்டிலே ஆபிரிக்காக்கண்டத்தில் மோர்என அறியப்பட்ட துலுக்கர் ஸ்பானியஇராச்சியத்திலே படையெடுத்துச்சென்று அதனைக்கைப்பற்றி அங்குள்ள கிறிஸ்தவர்களை அடிமைகளாக்கித் தங்கள்நாட்டுக்குக் கொண்டு சென்றனர். அங்குஅவர்களை விலங்குகளைப்போல்நடத்தி, அவர்களைச்சொல்லொணுவகையிலே துன்புறுத்திவந்தனர். சிலகிறீஸ்தவர்கள் அவர்கள்செய்த கொடிய உபத்திரவங்களுக்குஅஞ்சிச் சமயம்மாறி மகமதியரானார்கள்.

கிறீஸ்தவர்கள் அனுபவித்த ஆற்றொணுத் துன்பங்களைக்கண்டு மனமிரங்கிய பரலோகபூலோக இராக்கினியாகிய பரிசுத்ததேவதாயார் அந்தக்கிறீஸ்தவர்களைமீட்டு விடுதலைசெய்யும்பொருட்டு அர்ச். நொலாஸ்கி இராயப்பருக்கும், அர்ச். றைமுந்தப்பருக்கும், அரகோனியாவின் யாக்கோபுஅரசருக்கும் தனித்தனியே காணப்பட்டுத் தமதுபோரால் அடிமைகளை மீட்கும் ஒருசபையை ஸ்தாபிக்கும்படி கேட்டுக்கொண்டார். அவர்களும் தேவதாயாரின் வேண்டுதலுக்கிசைந்து ஒருசபையை ஸ்தாபித்து அக்காலத்திருந்த பாப்பானவரின் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.

இச்சபையார் கிராமங்கள்தோறும், பட்டினங்கள்தோறும் சுற்றித்திரிந்து யாசகம்இரந்து பெற்றபணத்தைக் கொண்டு துலுக்கருக்குச் சேரவேண்டிய இறைப்பணத்தைக்கட்டி, அடிமைகளான கிறீஸ்தவர்களை மீட்டுவந்தார்கள். இச்சபையாரால் கிறீஸ்தவர்கள் அடைந்த சகாயங்கள் அனந்தம். அதனால் பாப்பானவர் அடிமைகளைமீட்ட உபகாரமாதாதிருநாளைத் தேவதாயாருக்கு மகிமையாக ஏற்படுத்தினார். இத்திருநாளைத் திருச்சபை புரட்டாசிமாதம் 24-ந்திகதி கொண்டாடுகின்றது. லைடன்தீவிலே வேலணைக்கணித்தாயுள்ள சாட்டிஎன்னும் சரித்திரப்பிரசித்திபெற்ற திருசேத்திரத்திலே இத்திருநாள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. அடிமைகளைமீட்ட தேவதாயார் பாவிகளாகியஎம்மையும் பசாசின் அடிமைத்தனத்தினின்று மீட்டுப் பரலோகஇராச்சியத்தில் சேர்த்தருள்வாவாக! எஸ். எம். ஜே.

---

## ஆசிரியசேவை யூபிலிவிழா

நரக்களி, கத்தோலிக்க சிரேஷ்ட தமிழ்ப்பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. ம. தாசியுஸ் லெம்பட் அவர்களின் 25வருட ஆசிரியசேவைப் பூர்த்தியைமுன்னிட்டு அன்னாரைப் பாராட்டும்நோக்கமாய்க் கடந்த 15-9-59 செவ்வாய்க்கிழமை பங்குக்குரவர் வண. நிக்கலஸ் சுவாமியவர்கள் தலைமையில் வெள்ளிவிழாவைபவம் விமரிசையாக நடந்தேறியது. நரக்களி, அர்ச். செபஸ்தியார்ஆலயத்தில் காலை 7 மணிக்கு நிறைவேறிய திவ்வியபூசையுடன் ஆரம்பித்தவிழாவிலே பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டபின் மாலைசூட்டிப் பாடசாலை மண்டபத்திற்குள் விழாநாயகர் அழைத்துவரப்பட்டார். மாணவர்கள் இனியவாழ்த்துக்கீதங்கள் பாடியதும் சிரேஷ்டவகுப்புமாணவன் செல்வன் அ. ஸ்ரனிலாவுசால் அழகிய வாழ்த்துப்பத்திரமொன்று படித்துக்கொடுக்கப்பட்டது. அத்துடன் மாணவன் பி. அன்ரனியால் விலைமதிப்புள்ள அன்பளிப்புஒன்றும் வழங்கப்பட்டது. தொடர்ந்து வண. நீக்கலஸ்சுவாமியவர்களும், ஆசிரியர் திரு. வீ. எஸ். பிள்ளையவர்களும விழாநாயகரின் சீரியகுணநலன்கள், சேவைத்திறன்களைப் புகழ்ந்து சொற்பொழிவாற்றினர். விழாநாயகர் அனைவர்க்கும் நன்றிகூறினர். ஈற்றில் பரிமளிப்பான பகல்விருந்துடனும், சனசமூகநிலைய வாத்தியக்கோஷ்டியினரின் இசைக்கச்சேரியுடனும் மாலை 6 மணிக்கு விழாமுடிவடைந்தது. அடுத்தநாள் 16-ந்திகதி புதன்கிழமை விழாநாயகரின் உபயத்திலே பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் தப்போவைக் குடியேற்றதிட்டத்திற்கு உல்லாசப்பிரயாணம்சென்று திரும்பினர். அன்றுமாலை 7மணிக்கு நரக்களிக் கிராமமுன்னேற்ற சங்கத்தினரும், சனசமூகநிலையத்தினரும் தலைமை ஆசிரியரைச்சந்தித்து உபசரித்தனர். இரண்டுதினங்களாக வெள்ளிவிழாக்கொண்டாட்டக் கோலாகலங்களால் கிராமமே இன்பசாகரத்தில் மூழ்கியிருந்தது. — கண்டுகளித்தோன்

# கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2353**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம் நல்லூர்
சின்னக்குட்டியர் ஐயம்பிள்ளைமுதலி
— வழக்காளி

எதிராக

கோப்பாய், கோப்பாய் தெற்கு
கணபதிப்பிள்ளை வயித்திலிங்கம்
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 2353-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் நான்கு துண்டுக்காணிகள் 1959-ம் வருடம் அக்டோபர் (ஐப்பசி) மாதம் 24-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1633. மேலும் 1000 ரூபாவுக்கும் 24-7-58 தொடக்கம் 18-9-58 வரைக்கும் வருடமொன்றுக்குப் 10 வீத வட்டியும், அதன்பின்னர் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் 5வீதவட்டியும், கோட்டுச் செலவு 192ரூபா 41சதமும்.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று. கோப்பாய் தெற்கிறை "ஓடைவளவு" நிலப் பரப்பு 7. குளிகள் 6. இதற்கு எல்லை: கிழக்கு — குமாரசாமி முதலியார் கதிரவேற்பிள்ளையின் உரிமைக் காரர்களுக்கும், மறுபேர்களுக்குமுரிய ஆதனம். வடக்கு — கணபதிப்பிள்ளை வயித்திலிங்கத்துக் குரிய ஆதனம். மேற்கு — குமாரசாமி முதலியார் கதிரவேற்பிள்ளையின் உரிமைக்காரர்களுக்குரிய ஆதனம். தெற்கு — குளமும், குமாரசாமி முதலியார் கதிரவேற்பிள்ளையின் உரிமைக்காரர்களுக் குரிய ஆதனமும்: பதிவுஇல. K. 171/111.

2. மேற்படி கோப்பாய் தெற்கிறை "ஓடைவளவு" நிலப்பரப்பு 7. குளிகள் 16½. பயிர்களும். எல்லை: கிழக்கு — இருபாலைப் பாலசுப்பிரமணியசுவாமி கோவிலுக்குரிய ஆதனம். வடக்கு — சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவிலுக்குரிய ஆதனம். மேற்கும், தெற்கும் — கணபதிப்பிள்ளை வயித்திலிங்கத்துக்குரிய ஆதனங்கள். பதிவு இலக்கம் K. 171/112.

3. மேற்படி கோப்பாய் தெற்கிறை "ஓடைவளவு" நிலப்பரப்பு 7, குளிகள் 6. எல்லை: கிழக்கும், வடக்கும் — கணபதிப்பிள்ளை வயித்திலிங்கத்துக்குரிய ஆதனங்கள்: மேற்கு — குமாரசாமி முதலியார் கதிரவேற்பிள்ளையின் உரிமைக்காரர்களுக்குரிய ஆதனம். தெற்கு—குளமும், குமாரசாமி முதலியார் கதிரவேற்பிள்ளையின் உரிமைக்காரர்களுக்குரியஆதனமும் பதிவு இல. K. 171/113.

4. மேற்படி கோப்பாய் தெற்கிறை "ஓடைவளவு" நிலப்பரப்பு 7, குளிகள் 16½. எல்லை: கிழக்கும், தெற்கும் — கணபதிப்பிள்ளை வயித்திலிங்கத்துக்கும், மேற்கு — கணபதிப்பிள்ளை வயித்திலிங்கத்துக்கும், மறுபேர்களுக்கும். வடக்கு — சிதம்பரம் அம்பலவாண சுவாமி கோவிலுக்குரிய ஆதனம். பதிவு இலக்கம் K. 171/114.

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
கொமிஷனர்.

643, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை.
8-9-59

# பொது வர்த்தமானம்

### சந்திரனைப் படம்பிடிக்க முயற்சி

சந்திரமண்டலத்துக்குமேலே ஆறுமைல்உயரத்தில் ஒருசெயற்கைச்சந்திரனைச் சுற்றவிடமுடியுமா என்பதுபற்றிச் சோவியற்விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்தி வருவதாக டக்றர் ஷெடர்ண் பெல்றஎன்ற பிரபலருஷியவிஞ்ஞானி வெளியிட்டுள்ள அறிக்கைஒன்றிலிருந்து தெரியவருகிறது. சந்திரமண்டலத்தின் மேற்பரப்பைப் படம்பிடிப்பதுதான் இந்தச்செயற்கைச்சந்திரனை அனுப்புவதன் நோக்கமாம். சந்திரமண்டலத்தின் மேற்பரப்பில் காணப்படுகிறவைகளைப் படம்பிடித்துப் பூமிக்கு அனுப்புவதற்கான விசேஷதொழில் நுட்பக்கருவிகளும், ரெலிவிஷன்களும் இதில்அமைக்கப்பட்டிருக்குமென்றும், எதிர்காலத்திலே கிரகயாத்திரையைச் சாத்தியமாக்கும் நடவடிக்கையாகவே இந்தஆராய்ச்சியைநடத்த உத்தேசிக்கப் பட்டிருக்கிறதென்றும் முன்சொன்ன விஞ்ஞானி கூறியிருக்கின்றார்.

### ஆற்றுநீர்க் கலப்புவைபவம்

ஆபுகானிஸ்தான், எத்தியோப்பியா, இந்தியா, ஈறன், ஈறுய்க், இஸ்றுயேல், லெபனன், தென்ஆபிரிக்கா, அமெரிக்காபோன்ற 67நாடுகளின் முக்கியநதிகளிலிருந்து தனிப்பட்ட ஒருகப்பலில் கொண்டுபோகப்பட்டநீரை நியூயோக் நகர் வழியாகஓடும் ஹட்சன்நதியில் ஊற்றும்சடங்கு சமீபத்தில்நடைபெற்றது. ஹட்ஸன்நதி கண்டுபிடிக்கப்பட்டு 350ஆண்டுகள் நிறைவுறுகின்றன. அத்தொடர்பில்நடந்த நினைவுவிழாவின் போதுதான் ஆற்றுநீர்க்கலப்பு என்ற மேற்கூறிய சடங்குநடந்தது. அந்தந்த நாடுகளின் அரசியற்றூதுவர்கள் தத்தம்நாட்டின் ஆற்றுநீரை எடுத்துச்சென்று ஹட்ஸன்நதியில் ஊற்றிக்கலந்தனர். பலநாடுகளின் ஆற்றுநீர் ஒன்றுகலப்பதுபோல், பலநாட்டுமக்களின் மனமும் ஒன்றித்து, 'யாவரும் ஒரே பிறப்பு, யாவருக்கும் ஒரேபொதுவான இலட்சியம்' என்ற பரந்தமனப்பான்மை வளர்தல்வேண்டும் என்பதுதான் அச்சடங்கின் உட்கருத்து.

* * *

● சீனதேசத்தைச் சேர்ந்தவரான வண. தோமஸ் மேரி யூவென்பிறதர் தமதுபெரியதந்தையாரும், சீனுவிலே, ஹோனன்மாகாணத்தைச் சேர்ந்த சுமாத்தியன்நகர் மேற்றிராணியாருமான மகாவந். யோசெவ் யூவென் ஆண்டவரால் சமீபத்திலே ஐக்கியஅமெரிக்க தேசத்தில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கின்றார்.

● கீர்த்திவாய்ந்த ஜப்பானிய சித்திரகாரரான பியூஜிற்றுஅவர்கள் ஓர் கத்தோலிக்கராவதற்குத் தீர்மானித்துள்ளார். சிலவாரங்களின்முன் இவர் பிரான்ஸ்தேச றீம்ஸ்நகரைத் தரிசித்தபோதே அவ்வாறு தீர்மானிக்கலாயினர். இவர் இந்தமாதத்திலே ஞானஸ்நானம் பெறவிருக்கின்றார்.

● அடுத்துவரும் பாடசாலைவருடத்திலே சுமார் நான்குலட்சம்போலிஷ் பிள்ளைகள் சமயசம்பந்தமில்லாத சாதாரணபாடசாலைகளுக்குப் போகவிருக்கின்றார்கள். போலாந்திலே சமயம்என்பதேஇல்லாத சுமார்ஆயிரம் பாடசாலைகள் இருக்கின்றன. இவற்றிலே 600பாடசாலைகள் நவமாக அமைக்கப்பட்டவைகளாகும். இவ்வாறெல்லாம் வார்சோநகர வானொலி நிலையம் அறிவித்திருக்கிறது.

● லிசியேபதியிலுள்ள ஆசீர்வாதப் பர்சபைக் கன்னியாஸ்திரிமார் சமீபத்திலே யேசுவின்சிறியபுஷ்பமாகிய அர்ச். தெரேசம்மாள் உறுதிப்பூசுதல் பெற்ற 75-ம்ஆண்டுநிறைவுவிழாவை அவள் "பாடுபடுவதற்கான வரப்பிரசாத"த்துக்காகச் செபஞ்செய்துவந்த சிற்றாலயத்திலே கொண்டாடினார்கள்.

# அருட்செல்வி

## இன்றைய உலகில் கத்தோலிக்க வாலிபரின் இடம்

மூன்றாவது உலகயுத்தம் மூளுமா? என்பதே இன்றைய கேள்வி. உண்மையில் சமாதானமும், யுத்தமும் வாலிபரின் சக்தியில் ஊசலாடிக்கொண்டிருக்கின்றன. இக்கால உலகம் வாலிபரின் கையிலேயே தங்கியிருக்கிறது—ஏன்? இயங்கிக்கொண்டிருக்கிறதென்றே சொல்லலாம். ஆகவே, இன்று தேவ புத்திரராகத் தெரிந்தெடுக்கப்பட்ட கத்தோலிக்க வாலிபரின் முக்கியத்துவமோ மிக மிக மேலானது.

குருவானவர் "எனது வாலிபத்தை மகிமைப்படுத்தும் தேவனிடத்தில் பிரவேசிப்பேன்" என்று கூறிக்கொண்டே பலிபீடம் நோக்கிச் செல்லுகிறார். கிறீஸ்துநாதர் தமது வாலிபத்தையே பலியாக்கி உலகத்தை இரட்சித்தார். தமது கடைசி மூச்சிலும் வாலிபனை அர்ச். யுவானியாரையே தமது இடமாக மாதாவுக்குக் கையளித்தாரென்றால் வாலிபத்தின் மகத்துவத்தை எவ்வாறு கூறிமுடிப்பது! இத்துணை மகத்துவமும், வல்லபமும் நிறைந்த கத்தோலிக்கவாலிபர் ஒருமுகமாகத் தொண்டாற்றின், எதிர்த்து நிற்கக்கூடிய சக்திதான் யாதாகும்?

கல்விப்பருவம் முடிந்து கல்லூரியை விடும்போதுதான் வாலிபர்கள் ஆபத்து நிறைந்த துறைகளுக்குள் பிரவேசிக்கிறார்கள். அப்போது யௌவனபருவ சுதந்தரத்தின் மோசகரமான இன்பங்களைச் சுவை பார்த்துவிடுகிறார்கள். பின் அவர்கள் பராயப்பட்டபொழுது பிராயத்தரைக் காப்பதற்கான தாபனங்களால் அவர்களைக் காக்கமுடியாது போகிறது. எனவே, கத்தோலிக்க சேவாசங்கம், மரியாயின் சேனை போன்ற இயக்கங்களில் வாலிபர் சேர்ந்து தம்மைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்து வாழவேண்டும். இன்றேல் பக்தியையும், ஒழுக்கத்தையும் உருப்படுத்தும் சக்திகள் இல்லாத காரணத்தால் அவர்கள் வழிதவறிச் சிதறுண்ட மந்தைகளாவார்கள். நன்முன்மாதிரிகையான வாலிபரைக் கண்டுகளிப்பதே காலஞ்சென்ற எங்கள் பரிசுத்தபிதா 12-ம் பத்திநாதரின் தணியாத ஆவலாயும் இருந்தது.

சிவியமும், சத்தியமுமானவரால் ஏற்படுத்தப்பட்டு உண்மையையே போதித்துக்கொண்டிருக்கும் எங்கள் மாதாவாகிய கத்தோலிக்கதிருச்சபையின் மடியில் பாலூட்டப்பட்டவர்களே கத்தோலிக்க வாலிபர். ஆனால், உலகம் உண்மையைக் கைவிட்டு நாஸ்திகத்தின் போக்கில் நடந்துகொண்டிருக்கும் ஆபத்தில் சிக்கித் தத்தளிக்கிறது. அதேநேரத்தில் சமூக முன்னேற்றம், பொருளாதாரப் பெருக்கம், இன்பவாழ்வு ஆதியவற்றிற்கும் வாலிபரையே வழிபார்த்துக்கொண்டிருக்கிறது. ஆதலால், கத்தோலிக்க வாலிபரே நாஸ்திகத்தைத் தடுத்து, ஆஸ்திகத்தைக்காட்டி, நல்லறிவு ஊட்டி நன்மையின் பாதையில் மக்களைக் கொண்டுசெல்லும் பொறுப்புச் சுமத்தப்பட்டிருக்கிறார்கள். கத்தோலிக்க வாலிபர் இந்தக் கடமையை நன்குணர்ந்தால் செபம், தூய்மை, தியாகம் என்னும் மூன்றையும் பண்படுத்தவேண்டியவர்களாகிறார்கள்.

பாலரை வளர்ப்பதும், வயோதிபரைக் காப்பதும் வாலிபரே. கத்தோலிக்க வாலிபரே உண்மை அறியா வாலிபருக்கு உண்மையும், வெளிச்சமுமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு வாலிபனும் இன்னொரு கிறீஸ்துவாக வாழவேண்டும். திருச்சபையின் கருத்தைப் பிரதிபலிக்கும் சிருட்டிகளாகப் பிறக்கவேண்டும். உலகம் என்றும் கண்டிராத அன்பின்தேவனை அறிமுகப்படுத்தவேண்டும். ஆபத்துக்குள்ளும், அலங்கோலத்துக்குள்ளும் துணிகரமான சிப்பாயாக நுழையவேண்டும். சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டும். உன்னத தலைவியாகிய மரியாளின் சக்தியில் முழுநம்பிக்கை வைத்து, வாலிப தசையைத் தேவ இராச்சியத்துக்காக முற்றாக அர்ப்பணித்தால் சமாதான உலகத்தைச் சிருட்டிக்கும் சிற்பிகள் கத்தோலிக்க வாலிபரே என்றபெருமைக்கு இலக்காவோம்.

—✻—

## இதோ ஆண்டவருடைய அடிமையானவள்....

"இதோ ஆண்டவருடைய அடிமையானவள்; உமது வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது."

தினமும் மும்முறை இத்திருவாக்கியத்தை நாம் திருந்தாதிமணி ஒலிக்கும்வேளை சொல்லிவருகிறோமே தவிர நம்மில் யாராவது இதன் ஆழ்ந்த அர்த்தத்தைச் சிந்திக்கிறோமா?

மேற்கூறப்பட்ட திருவாக்கியம் யாரால் கூறப்பட்டதுஎன்பது எமக்குத் தெரிந்த விடயமே. மனோரம்மியமான மாலைவேளை. பட்சிசாலங்கள் தத்தம் உறைவிடம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. கதிரோன் குடதிசையில் இறங்கிக்கொண்டிருந்தான். அவ்வேளையிலே நசரேத் சிற்றூரில் ஒதுங்கிய ஓர் இடத்தில் ஓர்சிறு குடிசைக்குள் நடக்கும் சம்பவத்தைக் கவனிப்போம்.

அச்சிறு குடிசைக்குள் ஓர் மூலை. 14 வயது நிரம்பாத ஓர் யௌவன யுவதி பக்திப் பரவசத்தில் பரமனை வேண்டிக்கொண்டிருந்தாள். திடீரென அவ்விடம் பிரகாசிக்கிறது. அங்குமிங்கும் பார்க்கிறாள் அம்மாது. காரணம் தெரியாது திகைக்கிறாள். தேவதூதன் ஒருவன் புன்னகை பூத்த முகத்துடன் அவ் இளமாது அருகில் பணிந்த தோற்றத்துடன் கைகூப்பி நின்று "பிரிய தத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க! கர்த்தர் உம்முடனே" என்ற ஆனந்த செய்தியை, ஆனால், அம்மாது அதிசயிக்கும் செய்தியைக் கூறினான். அவ்விள மாதரசி திகைத்துப் போனாள். இருந்தும் "இஃது எப்படியாகும்! யான் மானிடனை அறியேனே" எனப் பதில் பகர, அத்தேவதூதன்: "இஸ்பிரீத்துசாந்துவானவர் உம்மில் நிழலிடுவார்" என்ற பரம இரகசியத்தைக் கூறினான். இவ் வார்த்தைகட்கு அம்மாது பகர்ந்த பணிவான விடையே நமது தலைப்பாகும்.


இவ்வார்த்தை கூறப்பட்டவுடனே அவ் இளம் ஸ்திரியின்மேல் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் இறங்கினார். உலக இரட்சகர் அவதாரமெடுத்தார்.

பரிசுத்த பரமபிதாவின் திருச்சித்தம் நிறைவேற — பாவிகளாகிய எங்களின் பாவங்கள் போக்க — திருச்சுதனின் அன்னையாகத் தன்னை அர்ப்பணித்த அம்மாது எமது தேவதாயே எனக் கூறாமலே தெரியும்.

பரலோக பூலோக இராசேஸ்வரியாகத் தான் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவள் இறுமாப்புக் கொள்ளவில்லை. இதோ ஆண்டவருடைய அடிமையானவள் என்றே கூறுகிறாள். அடிமை என்பதின் அர்த்தம் எம் அனைவர்க்கும் தெரியும். தாழ்மையின் சிகரமாய், பொறுமையின் கண்ணாடியாய் இவ்விடத்தில் எமதன்னை திகழ்வது எமக்கு எவ்வித படிப்பனை என நாம் உணராமலிருப்பது ஏன்?

மெசியாவின் வருகையைப்பற்றித் தீர்க்கதரிசிகள் அறிக்கையிட்டதும், தாவீது கோத்திரப் பெண்மணிகளிற் பலர் தன்னிடமே மெசியாஸ் பிறப்பாரென எண்ணித் தம்மை அலங்கரித்து ஆடம்பரமாகத் திரிந்தார்கள். ஆனால், அத்தகைய எண்ணமே எமது அன்னைமரி மாதாவிடம் கிஞ்சித்தும் இருந்ததில்லை. ஆனால், வாழ்நாள் பூராவும் கன்னியாகவாழவேண்டுமென்ற தணியாத அவாவுடைய எமது மங்கையர்திலகத்தைப் பரமன் பரலோகதாயாகத் தெரிந்தது எமது ஆனந்தத்தை அதிகரிக்கச் செய்வதொன்றே. என்றுமே ஆண்டவரின் அடிமையாகத் தம்மைஅர்ப்பணிக்கவேண்டுமென்ற மரியாளின் அவா பூர்த்தியானதும் எமக்கு ஆனந்திக்கத்தக்கதொன்றே.

ஆகவே, இனிமேலாவது "இதோ ஆண்டவருடைய அடிமையானவள்; உமது வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" என நாம் செபிக்கும்போது அதன் ஆழ்ந்த கருத்தைச் சிந்திப்போமாக.



இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல் எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.

— அர்ச். பிராஸ்சீஸ் சேல்ன்

## கத்தோலிக்க சேவை

கிறீஸ்துவின் அப்போஸ்தலவேலை பலகடமைகளில் அடங்கியிருக்கிறது. கடவுள் சகல சிருட்டிகளிலும் மானிடப்பிறவியைத் தமது அன்பின்நிமித்தம் தமது சாயலாகவே சிருட்டித்தார். இன்னும் அவர்களுக்குச் சுயாதீனத்தையும் கொடுத்திருக்கிறார். சத்தியமறையில் சேர்ந்த மக்களில் பெரும்பாலார் இல்லறமாம் நல்லறத்தில் ஈடுபட்டு உழைக்கிறார்கள். சர்வேசுரனின் அழைத்தலுக்கும் சிலர் காதுகொடுத்துக் குருமார், கன்னியர், சந்நியாசர்களாய்த் திகழுகிறார்கள். இவர்கள் ஆத்துமாக்களுக்கு உதவி புரிவதற்காககவே தமது சிவியத்தை அர்ப்பணிக்கிறார்கள். கோடிக்கணக்கான ஆத்துமாக்களை இரட்சிக்க இலைமறைகாய்போல் இருக்கும் துறவறத்தார் போதாது. "அறுப்பு மிகுதியாம், வேலையாட்களோ கொஞ்சம்" என்று யேசுநாதர் சொல்லுகிறார். இவ்வாக்கியம் ஒவ்வொரு ஆத்துமாக்களுக்கும் சொல்லப்படுகிறது. இதன் முக்கியத்தை உணர்ந்தே அர்ச். 10-ம் பத்திநாதர் இக்கத்தோலிக்கசேவையை உருவாக்கிச் சகல கிறீஸ்துவர்களுக்கும் இக்கடமையைக் கொடுத்திருக்கிறார். ஒவ்வொருவரும் கிறீஸ்துவின் ஞானச்சரீரத்தை வளர்க்க வேண்டுமென்கிறார். கிறீஸ்துவ கத்தோலிக்க சேவையென்பது கிறீஸ்துவ சிவியத்தை இன்பமாய் விளங்கி அதை அனுசரித்தலே. வேதஅறிவு அற்றவர்களிடையே தொண்டு புரிவது உபாத்திமார், உபதேசிமாரின் கடமை மட்டுமல்ல, ஒவ்வொரு விசுவாசியினதும்கடமையாகும். ஆனால், தங்களுடைய எண்ணப்படி வேதக் கடமையைச் செய்யமுடியாது. இதற்கு ஞான அதிகாரிகளின் ஆலோசனை அனுமதியைப் பெற வேண்டும். சரீரத்துக்கு ஆத்துமம் உயிராவதுபோல, கத்தோலிக்க சேவைக்கு உயிர் ஞான அதிகாரிகளே. கத்தோலிக்க சேவையை (1) கிறீஸ்துவின் போதனையைப் பரப்புதல், (2) துஷ்ட சக்திகளை எதிர்த்துப் போராடல், (3) நாளாந்த சிவியத்தில் கிறீஸ்துவின் போதனையைப் பிரதிபலித்தல் முதலான மனப்பான்மையுடன் நாம் செய்வதால் கிறீஸ்துவின் விருப்பத்தையும், திருச்சபையின் ஆவலையும் பூர்த்தி செய்வதோடு நமது ஆத்துமத்துக்கு வேண்டிய நன்மையையும் பெற்றுக் கொள்வோம்.

# ST. PATRICK'S COLLEGE, JAFFNA.

A HYMN COMPETITION will be sponsored by our College early next year, about the month of February.

Two prizes—one of Rs. 100-00 and another of Rs. 50-00—will be awarded to the winners.

We invite as many groups as possible to join this competition.

## RULES

1. The hymn should have as its theme the Sacrifice of the Mass.
2. It should take not less then 8 minutes and not more than 15 minutes.
3. The air should be oriental and the words original.
4. It should be sung by a group of not less than three.
5. A school may present any number of groups and the same group may offer two items.
6. The use of மிருதங்கம், violin and தாளம் is optional.
7. The words of the hymn to be sung must be submitted by the end of January.
8. The decision of the judges will be final.

* * *

We intend conducting some classes in oriental music—about 2 classes a week for Catholic teachers.

Will the Headmasters and Headmistresses who are interested, please contact me for details.

**S. N. Arulnesan, O. M. I.**
Rector.

22nd Sept. 1959.

*I recommend this Competition to our Schools.*

**Philip Ponniah,**
Gen. Manager R. C. Schools

# சத்தியவேதக் கீர்த்தனைப்போட்டி

1960-ம் ஆண்டு மாசிமாதம் நமது கல்லூரி ஆதரவின்கீழ் ஒரு கீர்த்தனைப் போட்டி நடாத்தவிருக்கின்றோம் இதில் சேர்ந்து வெற்றியடைபவர்களுக்கு முதலாம்பரிசாக ரூபா 100/-ம், இரண்டாம்பரிசாக ரூபா 50/-ம் வழங்கப்படும்.

இப்போட்டியில் பல பாடகர் குழாங்களைக் கலந்துகொள்ளும்படி. மிகவும் ஆர்வத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

## போட்டி விதிகள்

1. பாடும் கீர்த்தனையின் பொருள் திவ்விய பூசைப்பலியைப் பற்றியதாக இருக்கவேண்டும்.
2. பாடல் எட்டு நிமிஷங்களுக்குக் குறையாமலும், பதினைந்து நிமிஷங்களுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.
3. இராகம் கீழ்நாட்டுச் சங்கீதத்தை ஒட்டியதாகவும், பாட்டுகள் புதிதாக இயற்றப்பட்டதாயும் இருக்கவேண்டும்.
4. பாடகர் குழாமில் மூவருக்குக் குறையாமல் சேர்ந்து பாடவேண்டும்.
5. ஒரு பாடசாலையிலிருந்து பல குழுவினர் இதிற் சேர்ந்துகொள்ளலாம். ஒரு குழுவினர் இருபாடல்களைப் பாடவும் அனுமதிக்கப்படுவர்.
6. விரும்பினால் 'வயலின்', மிருதங்கம், கைத்தாளம் முதலிய இசைக் கருவிகள் பாவிக்கலாம்.
7. கீர்த்தனையின் பாட்டுக்கள் தைமாதம் முடிவதற்குமுன் நமக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

**மத்தியஸ்தரின் தீர்ப்பே முடிவானது.**

கத்தோலிக்க உபாத்திமாருக்கு வாரம்இருமுறை கீழ்நாட்டுச் சங்கீத வகுப்புகள் நடத்தவிருக்கிறோம். சங்கீதத்தில் ஆர்வமுள்ள தலைமை ஆசிரியர்களும், ஆசிரியைகளும் தயவுசெய்து விபரங்களுக்கு எழுதவும்.

**S. N. அருள்நேசன், ஓ. எம். ஐ.**
கல்லூரித் தலைவர்.

சம் பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம், 23-9-53.

**எங்கள் பாடசாலைகள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.**

**பிலிப் பொன்னையா,**
ரே. க. பாடசாலைகளின் பொது முகாமைக்காரர்.

## JAFFNA MUNICIPAL COUNCIL

### Assessment Tax 3rd Quarter, 1959

Rates for 3rd Quarter 1959 should be paid in the Municipal Office before 3 p.m. on FRIDAY the 6th, of NOVEMBER, 1959.

All payments thereafter will be subject to a additional levy of 10% as warrant costs.

Remittances by Cheques, Money Orders or Postal Orders should be in favour of the Municipal Commissioner, Jaffna. Particulars (ie) premises numbers name of street and the Ward etc. should accompany all such remittances.

**Hudson Selvarajah,**
for Municipal Commissioner,
Jaffna.

Municipal Office,
22nd September, 1959.

## வீதிகளில் சுவரொட்டி விளம்பரங்கள்

"கொழும்புநகரம் தமிழர்களின் நகரமாகாமல் பாதுகாத்துக்கொள்ளுங்கள்" என்று கொட்டைஎழுத்துக்ளில் தலையங்கமிடப்பட்ட பெரியசுவரொட்டிச் சிங்களவிளம்பரங்கள் கொழும்பு நகரின் பலபாகங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன. கொழும்பு நகரசபைத் தேர்தல் விரைவிலே நடைபெறவிருப்பதை முன்னிட்டுத் திரு. கே. எம். பி. இராஜரத்தின கோஷ்டியினரும், கம்பகாப்பிரதிநிதி திரு. டி. எஸ். பண்டாரநாயகா கோஷ்டியினரும் ஆரம்பித்துள்ளபிரசாரஇயக்கத்தையொட்டியே இந்தவிளம்பரங்கள் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. கொழும்பு நகர நிர்வாகத்தைச் சிங்களமொழியில் நடத்துவதற்குப் பொதுமக்களின் ஆதரவு இந்தவிளம்பரங்களின் மூலம் கோரப்பட்டிருக்கிறது. பதினைந்து லட்சம்இந்தியர்கள் இலங்கையிலுள்ள வேலைகளைப்பறித்து எடுத்துக்கொண்டதால் ஐந்துலட்சம் சிங்களவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்றும் அவ்விளம்பரங்களில் விளம்பரப்படுத்தப் பட்டிருக்கிறது.

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினாலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் அருளினாலும், எவராலும் கைவிடப்பட்டவர்களின் மத்தியஸ்தராகிய அர்ச். யூதாததேயு அப்போஸதலரின் தயவினாலும், கோடி அற்புதரான அர்ச். அந்தோனியாரின் அனுக்கிரகத்தினாலும் நாங்கள் இரந்து கேட்டுக்கொண்ட மன்றாட்டு கைகூடியது. அவர்களின் நாமம் என்றும் புகழப்படுவதாக! நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்

* * *

எல்லோருக்கும் சகாயம்புரியும் பரிசுத்த சதாசகாயமாதா நான் கேட்ட எலலாவரங்களையும் தந்தார். என்நன்றியை முன்பேதெரிவியாததையிட்டு மனவருத்தப்படுகிறேன். நான்இப்பொழுது சுகயீனமாய்ப் படுக்கையில் இருக்கிறேன். நான் சதாகாலசகாயநாயகியின் அரவணைப்பையும். நம்பிக்கையுடன் வேண்டுகிறேன்.

**இராசநாயகம் சிசிலியா**
இளவாலை

## தலதாபனமந்திரியின்விஜயம்

வருகிறஐப்பசிமாதம் 1-ந்திகதி வியாழக்கிழமைகாலை 9-30மணியளவிலே யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கும் கிராமச்சங்கங்களின் தலைவர்கள்மகாநாட்டுக்குத் தலதாபன — வீடமைப்புமந்திரி திருமதி விமலா விஜயவர்த்தன சமுகமளிப்பாரெனத் தெரியவருகிறது. இம்மகாநாட்டில் சமுகமாயிருக்குமாறு வடமாகாணப் பாராளுமன்றப் பிரதிநிதிகளும், காரியாதிகாரிகளும் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

## சாள்ஸ் வின்சென்ற்

அவர்களின்

முதல்வருட

## மரண ஞாபகம்

பிறப்பு: 19—7—96
இறப்பு: 1—10—58

ஓராண்டு ஊர்ந்ததுவே
தந்தையே! எங்கள்
உள்ளமதில் மூண்டகனல்
நூர்ந்த தில்லை
நீராண்ட கண்களோடு
நெஞ்சம் வெந்து
நீறுகிப் போகினுமுன்
நினைவு போமோ?
பேராண்ட வாடாத
பொற்பூவே உந்தன்
மனைவியும் மக்களும்
வாடுகின்றோம்
சீராண்ட பொன்னுலகின்
சிறப்புக் கண்ட
தந்தையே எம்மவர்க்காய்
வேண்டுவாயே!

இம்மண்ணுலகைவிட்டு மறைந்தும் எமது மனத்திரையைவிட்டு அகலாத எமது நேசபத்தாவும், அரியதந்தையுமாகிய சாள்ஸ் வின்செற் அவர்கள் இப்புவியைவிட்டு நீங்கிய முதல்வருடநிறைவு தினம் 1-10-59இல் பூர்த்தியாகிறது. அன்று காலை 6மணிக்கு அவரின் ஜெனனபதியாகிய, யாழ்ப்பாணம் அர்ச். அடைக்கலமாதா ஆலயத்தில் ஓர் துக்கப்பாடற் பூசை நிறைவேற்றப்படும். இதனைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளே! சங். கன்னியர்களே! அன்பர்களே! இரக்கமுள்ள தேவன் இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அருளுமாறு மன்றாடும்படி வினயமாக வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்

மனைவி: மேரி ஜெர்மையின் வின்சென்ற்
மக்கள்: அன்ரன் வின்சென்ற்
அல்விறட் வின்சென்ற்
அலோசியஸ் வின்சென்ற்
ஆல்வ்ஸ்ரன் வின்சென்ற்
கிறிஸ்ரீனு யோசவ்
மேரிஆன் வஸ்தியாம்பிள்ளை
தெரேஸ் பீற்றர்
றீற்ரு மரியதாஸ்
மறீனு வின்சென்ற்

யாழ்ப்பாணம் மாநகரசபை

## சோலைவரி

### மூன்றும் கந்தாயம்—1959

1959-ம் ஆண்டு மூன்றும் கந்தாயத்துக்கான சோலைவரிப்பணம் 1959-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும்.

குறிக்கப்பட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் கூடுதலாகப் 10% வெலியாத்துப்பணம் அறவிடப்படும்.

காசோலைகள், மணியோடர்கள், போஸ்டர்ஓடர்கள் முதலியன மாநகரசபைக் கொமிஷனர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கே அனுப்பப்படவேண்டும். இவ்விதம் பணம் அனுப்பப்படும்பொழுது வீட்டு இலக்கம், தெருப்பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களும் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும்.

**ஹட்சன் செல்வராசா,**
மாநகரசபைக் கொமிஷனருக்காக,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
19-9-59.

## நேர்த்தியின் பூர்த்தி

பரிசுத்த புதுமைமாதாவின் இரக்கத்தினால் யான் அவவிடம் கேட்ட சகாயம் ஓர்அளவில் கிடைக்கப்பெற்று ஆறுதல் அடைந்தேன். எனது தாழ்மையான நன்றியை அவவுக்குச் சமர்ப்பிக்கின்றேன். நேர்த்திப்படி பிரசுரிக்கின்றேன்.

D. T. N.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 24-1959.